PRIVATE
CIRCULATION
ONLY

VOLUME -1, EDITION: 2 ( 07.07.2021 )

QUARTERLY ISSUE (APR '21 - JUN '21)

# TNRBA

TAMIL NADU RAJPUT BONDIL ASSOCIATION (Reg. No 10/2019)

## TNRBA * NEWSLETTER * செய்தி மடல்








## HIGHLIGHTS

- TNRBA Newsletter Inauguration மின் இதழ் துவக்க விழா
- Raja Desingh Birthday Celebrations ராஜா தேசிங்கின் பிறந்தநாள் விழா
- Joint Prayer by our Community Members கூட்டு பிரார்த்தனை
- Our Community's Achievement Ladies சாதனை பெண்மணிகள்
- Wishes
- Achievements
- Events

# TAMIL NADU RAJPUT BONDIL ASSOCIATION

## TNRBA NEWS LETTER -EDITION 2

## INSIDE THIS ISSUE


| | |
|---|---|
| Letter from Editorial board | 3 |
| அறிந்து கொள்வோம் நம் தலைவர்கள் பற்றி | 6 –7 |
| 10% இட ஒதுக்கீட்டுக்கான சட்ட போராட்டம் | 10-12 |
| அரசாங்கத்திடம் சங்கம் வைத்த கோரிக்கைகள் | 13 –16 |
| Happy Events of our Executive Committee Members | 17 -19 |
| திரு.முனிசுந்தர் சிங்கிற்கு நினைவு அஞ்சலி | 20 –23 |
| Commerce stream after 12th Standard (Dr.M.Govarthana Singh) | 24 –28 |
| Maharana Pratap Jayanthi | 30 –31 |
| மருத்துவ உதவி | 32 –33 |
| கூட்டு பிரார்த்தனை | 34 –40 |
| TNRBA மின் இதழ் வெளியீட்டு விழா | 41 –42 |
| ராஜா தேசிங்கின் 328 வது பிறந்த நாள் விழா | 43 –48 |
| செஞ்சி கோட்டை மற்றும் ராணிப்பேட்டை பற்றிய தகவல்கள் | 49 –50 |
| நமது சமூக சாதனை பெண்மணிகள் -1 (திருமதி. தாரணி பிரபு சிங்) | 51 –52 |
| பிறரை மகிழ வைத்து மகிழுங்கள் (Dr.G.பவானி சிங்) | 53 –54 |
| நமது சமூக சாதனை பெண்மணிகள் -2 (திருமதி. நிரஞ்சனி தேவி) | 55 –58 |
| ஆத்மா பற்றி ஸ்ரீ.ரமணர் அவர்கள் (திரு.K.விஜயகுமார் சிங்) | 59 –61 |
| கவிதை – சீரிய வளர்ப்பு (திரு.B.K.பாலாஜி சிங்) | 63 |
| நமது சமூக சாதனை பெண்மணிகள்-3 (திருமதி.அபிராமி பாய் அசோக் குமார் சிங்) | 64 –66 |
| EC Members Family Marriage Functions | 67 –68 |
| நமது சமூக சாதனை பெண்மணிகள் -4 (Smt.Vidya Magesh Kumar) | 69 –71 |
| Marriage Greetings | 72 –73 |
| கொரோனா கவிதை.....(திரு.சர்தார்ஜி, ஜெயங்கொண்டசோழபுரம்) | 74 –75 |
| நமது சமூக சாதனை பெண்மணிகள்-5 (திருமதி. காஞ்சனா பாய்) | 76 –78 |
| Birth Day Wishes | 79 –88 |
| நமது சமூக சாதனை பெண்மணிகள்-6 (திருமதி.பத்மினி பாய்) | 89 –90 |
| பெற்றோர்களை மதிப்போம் (திரு.V.சுரேஷ் பாபு சிங்) | 91 –92 |
| நம் இனத்தின் பெண் பாலருக்கு சீரிய கருத்து (திரு.B.K.பாலாஜி சிங்) | 93 –95 |
| Marriage Anniversary Wishes | 96 –101 |
| இரங்கல்கள் | 102 –106 |
| சங்கத்தின் பார்வையும் பணியும் (J..பிரகாஷ் சிங்) | 107 |
| TNRBA நிர்வாக குழு | 108 –110 |
| விளம்பரம் | 111 –112 |

## Letter from the Editorial Board

அன்பு வாசகர்களே வணக்கம் !

TNRBA மின் இதழின் இரண்டாம் பதிப்பில், உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி. நம் சமுதாய நிகழ்வுகளை அனைவரும் தெரிந்துக் கொள்ளும் வகையில் தமிழ் புத்தாண்டு அன்று மின் இதழின் முதல் பதிப்பை வெளியிட்டோம். உங்களுக்கு பிடித்திருக்கும் என நம்புகிறோம். இந்த இரண்டாம் பதிப்பில் நம் சமூக தலைவர்களை அறிந்துக் கொள்ளும் வகையில் "அறிந்து கொள்வோம் நம் தலைவர்கள் பற்றி" என்கிற புதிய தொடர் கட்டுரை வெளியிட துவங்கியுள்ளோம்.

அது போல நம் சமூகத்தில் முன்னேறி வரும் பெண்கள் அவர்களின் வெற்றி பயணத்தை "நமது சமூக சாதனை பெண்மணிகள் " என்கிற தலைப்பில் பகிர்ந்து உள்ளார்கள். அது நம் சமூக இளம் பெண்களுக்கு அவர்கள் வாழ்க்கையில் முன்னேற ஒரு ஊந்து கோலாக அமையும் என்று நம்புகிறோம்.

மேலும், படித்துக் கொண்டிருக்கும் இளஞர்களுக்கு வழி காட்டும் விதமாக "Commerce Stream after 12th Standard" என்ற கல்வி கட்டுரையும் வெளியிட்டுள்ளோம்.

புதிய முயற்சியாக வரன் தேடும் சமுதாய மக்களுக்கு உதவும் பொருட்டு மணமகன், மணமகள் பற்றிய விபரங்களை ஒறுங்கிணைத்து இலவச இணைப்பாக மின் இதழுடன் துணை புத்தகமாக இணைத்துள்ளோம்.

இவை அனைத்தும் வழக்கமாக வெளி வரும் சங்க செய்திகள், கவிதைகள், பிறந்த நாள், மண நாள், இரங்கல் செய்திகளுடன் கூடுதலாக வெளியிட்டுள்ளோம். பல நிகழ்வுகள் இந்த இதழில் இடம் பெறாமல் போயிருக்கலாம், அதனை தவிர்க்க உங்கள் இல்லங்கள் மற்றும் சுற்று வட்டார நம் சமுதாயத்தின் நிகழ்வுகளை புகைபடத்துடன் அனுப்பி வைக்கவும். நீங்கள் அளித்து வரும் ஆதரவிற்கு நன்றிகள். தொடர்ந்து ஊக்கப்படுத்துங்கள். இந்த இதழ் வெளிவர ஊக்கமும், ஆதரவும் அளித்து வரும் நம் தலைவர் Dr.G.**பவானி சிங்** அவர்களுக்கு நன்றிகள் பல கோடி!! இந்த மின் இதழை உருவாக்குவதற்கு எனக்கு உதவியும், ஆலோசனைகளையும் வழங்கிய மின் இதழ் நிர்வாக குழு உறுப்பினர்கள் திரு.V.சுரேஷ் பாபு சிங் , திரு.B.K.பாலாஜி சிங், திரு.R.கார்த்திக் மற்றும் திரு.பிரேமானந்தா சிங் ஆகியோருக்கு என் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள் அன்பு சகோதரன்,

J.பிரகாஷ் சிங்
இயக்குநர் TNRBA இணயதளம் மற்றும் மின் இதழ்,
பொது செயலாளர் - தமிழ் நாடு ராஜ்புத் பொந்தில் சங்கம்
Date: 07.07.2021




## வாழ்த்துக்கள்



தமிழ் நாடு ராஜ்புத் சங்கத்தின் மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய நம் தலைவர் Dr.G.பவானி சிங் அவர்கள் "அகில பாரதிய சத்திரிய மகாசபா (1897)" வின் அகில இந்திய மூத்த துணை தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார் என்ற மகிழ்ச்சியான செய்தியை உங்களுக்கு தெரியபடுத்துவதில் பெரிதும் பெருமை படுகிறேன்.

இந்த நற் செய்தியை சற்றுமுன் அகில பாரதிய சத்திரிய மகாசபா (1897)" வின் தேசிய தலைவர் மாண்புமிகு திரு. ராஜா மன்வேந்திரா சிங் ஜி அவர்கள் பிரகடன படுத்தியுள்ளார்.

நம் சமுதாய வளர்ச்சிக்காக உழைத்துக் கொண்டிருக்கும் நம் சமூக காவலர் Dr.G.பவானி சிங் அவர்களின் சேவை இனி பாரதம் முழுக்க பரந்து விரிய போகிறது. அவர் பணி சிறக்க, மேன்மேலும் வெற்றிகள் பல பெற தமிழ் நாடு ராஜ்புத் பொந்தில் சங்க நிர்வாக குழு சார்பாகவும், உங்கள் சார்பாகவும், என் சார்பாகவும் வாழ்த்துகிறேன்.

J.பிரகாஷ் சிங்
பொது செயலாளர்
தமிழ் நாடு ராஜ்புத் பொந்தில் சங்கம்

Date: 02.07.2021

## *Message from Raja Manvendra Singh.......*

Its our honour to announce Dr. G Bhawani Singh ji resident of Krishnagiri District Tamil Nadu will be All India Senior Vice President of Akhil Bharatiya Kshatriya Mahasabha (1897)

We congratulate them, and wishing good luck.

Raja Manvendra Singh
National President
Akhil Bharatiya Kshatriya Mahasabha

*****

## HAPPY BIRTH DAY
## (02.07.2021)



Tamil Nadu Rajput Bondil Association Wishing Dr.A.P.Singh Ji - National Vice President ABKMS and Eminent Lawyer of Supreme Court, Delhi on the occasion of his Happy Birthday.

We wish him...
"Many More Happy Returns Of The Day. May God Bless you and your your Family with Good Health, Wealth and Peaceful Life". Your great service Is more essential to the Nation and our Rajput Community. All The Best.

Best Wishes.
Dr G.Bhavani Singh
State President
Rajput Bondil Association
Tamilnadu.

TNRBA WISHING THEIR PRESIDENT

ON HIS WEDDING ANNIVERSARY



WEDDING DATE : 22.04.2021

**DR.G.BHAVANI SINGH—SMT.VIJAYA BAI**

**HOSUR**

# அறிந்து கொள்வோம் நம் நம் தலைவர்கள் பற்றி

## DR.G.BHAVANI SINGH JI

1

டாக்டர்.G.பவானி சிங் அவர்கள் 1960 ஆம் ஆண்டு மே மாதம் 16ம் தியதி அன்று தமிழ் நாட்டில், ஓசூரில் திரு.S.கணேஷ் சிங்- திருமதி. C.தாரா பாய் தம்பதியருக்கு மகனாய் பிறந்தார்.

பள்ளியில் படிக்கும் சமயத்திலேயே தந்தையாருடன் விவசாயத்திலும்,1958 ஆம் முதல் தந்தையார் நடத்தி வந்த ஸ்ரீ.பவானி போட்டோ ஸ்டுடியோ தொழிலும் தந்தைக்கு உதவியாக இருந்து வந்தார். S.S.L.C பள்ளி தேர்ச்சிக்கு பிறகு தன்னை முழு நேர தொழிலில் ஈடுபடுத்திக் கொண்டார். 1980 ஆம் ஆண்டு முதல் 20 வருடங்கள் நீல உலோக குவாரி தொழிலும் (Blue Metal Quarry) செய்து வந்தார். அவரது அயராத உழைப்பு, கடின முயற்ச்சியின் பயனாக தொழிலில் பல துறைகளில் ஈடுபட்டு பன்முக தன்மையுடன் அவற்றை வெற்றிகரமாக நடத்தி வருகிறார்.

1981 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22ம் தியதி திருமதி.B.விஜயா பாய் அவர்களை, பெற்றோர்கள் அவருக்கு திருமணம் செய்து வைத்தனர். அவருக்கு திரு.B.பகவான் சிங், திரு.B.பரத்ராஜ் சிங் என்ற இரு மகன்கள் உள்ளனர்.

மூத்த மகன் திரு.B.பகவான் சிங் அவர்கள் B.E. இன்ஜினியரிங் முடித்து தகவல் தொழில் நுட்ப துறையில் (IT) பணி பரிந்து வந்தார். CTS கம்பெனியில் 16 ஆண்டுகள் பணிபுரிந்த பின்னர் தந்தைக்கு தொழிலில் உறு துணையாக இருக்கும் பொருட்டு டைரக்டர் (Director) என்கிற உயர் பொறுப்பிலிருந்து ஒய்வு பெற்றார். ஆனால் தற்போதும் அவரது திறமையின் காரணமாக சில IT கம்பெனிகள் கேட்டு கொண்டதற்கு இணங்க பகுதி நேர தொழில் செய்து வருகிறார். அவரது துணைவியாரது பெயர் திருமதி. நந்தினி B.C.A படித்துள்ளார். அவர்களுக்கு மூன்று பெண் குழந்தைகள் உள்ளனர்.

இளய மகன் திரு.B.பரத்ராஜ் சிங் அவர்கள் B.Tech, MBA (IIM) படித்துள்ளார். அவர் தற்போது அகில இந்திய அப்பலோ மருத்துவ மனையின் ஆன்கோலஜி பிரிவுக்கு மனிதவள மேம்பாட்டு துறை தலைவராக உள்ளார் (HR Head). அவரது துணைவியார் பெயர் திருமதி. ஜனனி B.E (ECE) படித்துள்ளார். அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை உள்ளது.



# அறிந்து கொள்வோம் நம் நம் தலைவர்கள் பற்றி

## DR.G.BHAVANI SINGH JI

1

டாக்டர்.G.பவானி சிங் அவர்கள்..

1).ஸ்ரீ.பவானிஸ் பாம்பே டையிங் ஷோரூம் (அங்கீகாரம் பெற்ற பாம்பே டையிங் துணி விற்பனையாளர்)



2). துர்கா பவானி மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் ( அங்கீகாரம் பெற்ற சுசுகி இரு சக்கர வாகன விற்பனையாளர்),




3). ஸ்ரீ.பவானிஸ் கிராண்ட் பேலஸ் (AC திருமண மண்டபம்)
ஆகிய தொழில்களை ஓசூரில் நடத்தி வருகிறார்.




சமுதாய நலன் மற்றும் பொது தொண்டில் மிகவும் அக்கறை கொண்டவர்.

தமிழ் நாடு ராஜ்புத் பொந்தில் சங்கத்தில் தலைவராக உள்ள அவர், சமுதாய நலனுக்காக தன்னை அற்பணித்துக் கொண்டு, சமுதாய மக்களின் முன்னேற்றத்துக்காக பாடுபட்டு வருகிறார்.

அவர் பணி சிறக்க, அவரை வாழ்த்தி பெருமை கொள்வோம்.

**J.Prakash Singh**
இயக்குநர்- TNRBA இணயதளம் மற்றும் மின் இதழ்
(தமிழ் நாடு ராஜ்புத் பொந்தில் சங்கத்துடன் இணைக்கப்பட்டது)

# CONGRATULATIONS



**OUR HEARTFELT THANKS TO DR.G.BHAVANI SINGH JI — PRESIDENT OF TAMIL NADU RAJPUT BONDIL ASSOCIATION FOR FILING PETION ( D.No.37933/SCI/PIL(E)2021 ) IN SUPREME COURT TO DIRECT TAMIL NADU & OTHER STATES TO IMPLEMENT 10 % RESERVERATION FOR ECONOMICALLY BACKWARD CLASS AS PER CENTRAL GOVERNMENT DECLARATION AND IMPLEMENTATION ADVISE. SUCCESS OF THIS PETITION WILL HELP OUR COMMUNITY MEMBERS TO GET THEIR RIGHTS TO GET GOVERNMENT JOBS AND ADMISSION IN HIGHER EDUCATIONS.**

**OUR SPECIAL THANKS TO DR.A.P.SINGH, SUPREME COURT LAWER FOR TAKING UP THIS CASE IN SUPREME COURT ON BEHALF OF TAMIL NADU RAJPUT BONDIL ASSOCIATION.**

**LET US PRAY FOR SUCCESS FOR THE INITIATIVES TAKEN BY DR.G.BHAVANI SINGH JI .**

98427 22263
Reg. No. (Old 326/69) New. 10/2019
TAMILNADU RAJPUT BONDIL ASSOCIATION
Bhavani's Grandpalace, Outer Ring Road, HOSUR - 635 109.
E-mail : bhavanisingh.hosur@gmail.com
Dr. G. Bhavani Singh
State President - Tamil Nadu

# ANNOUNCEMENT

Namasthey !

Before the Hon'ble Supreme Court of India petition vide D.No.37933/SCI/PIL (E) 2021 filed by Dr.A.P.Singh Senior Advocate, Supreme Court on behalf of Dr.G.Bhavani Singh, President of Tamil Nadu Rajput Bondil Association it is stated in the petition that, the Central Government had declared and implemented 10% reservation for the uplift of the economically poor people all over India, in all Government services and education, But not in Tamil Nadu. This discrepancies disturb the whole population of Tamil Nadu and same position is also in some other states.

In the petition that our constitution is wedded to the concept of equality is a basis feature. Under article 15(2), there is prohibition that state shall not discriminate against any citizen on grounds only of religion, race, cast, sex and place of birth or any of them.

The question arise by Dr.A.P.Singh eminent lawyer of Supreme Court, Delhi. Dr.Singh questioned most of the states governments had accepted the same and implemented in their states. Whereas in Tamil Nadu the government has not taken any steps for implementing the same. Because of this more than 45 lakhs of Rajput Bondil families and other communities of General caste are affected in Tamil Nadu.

Eminent lawyer Dr.A.P.Singh added that, Tamil Nadu Rajput Bondil Association already submitted memorandum to the Honourable President of India, Hon'ble Prime Minister of India, Chief Minister of Tamil Nadu, Chief Justice of Tamil Nadu High court, Honourable Governor of Tamil Nadu in the leadership of Dr.G.Bhavani Singh President. But the Tamil Nadu Government do not take necessary action for the uplift of community, so petition filled through Dr.G.Bhavani Singh and the Association before the Honourable Supreme Court of India to get 10% reservation achieve for the economically poor people in Tamil Nadu and other rest states, which are not still covered 10 percent reservation of economically weaker person's of other state. Even Central Government had been already passed order earlier in this regard.

Thanks & Regards,

Dr.G.Bhavani Singh
President
Tamil Nadu Rajput Bondil Association.

Date: 14.06.2021
Place: Hosur

# பொருளாதார ரீதியாக பின் தங்கிய மக்களுக்கு 10% இட ஒதுக்கீட்டிற்கான சட்டப் போராட்டம்.

**Dr.G.BHAVANI SINGH**

## முக்கிய அறிவிப்பு

வணக்கம் !

தமிழ்நாடு ராஜ்புத் பொந்தில் சங்க தலைவர் டாக்டர்.ஜி.பவானி சிங் அவர்கள் சார்பாக உச்ச நீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர் டாக்டர்.ஏ.பி. சிங் அவர்கள் மாண்புமிக்க இந்திய உச்சநீதிமன்றத்தில் D.No.37933 / SCI/ PIL (E) 2021 மனுவை சமர்பித்துள்ளார்.

மனுவில் கூறபட்டுள்ளதாவது, நாடு முழுவதிலும் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள மக்களுக்காக அனைத்து அரசு பணிகளிலும், கல்வியிலும் 10% இட ஒதுக்கீடை மத்திய அரசு அறிவித்துள்ளது. ஆனால் தமிழ் நாட்டில் இதனை அமுல் படுத்தவில்லை. இந்த முரண்பாடுகள் தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த மக்களையும் பாதிக்கிறது, இதே நிலை வேறு சில மாநிலங்களிலும் உள்ளது.

நமது அரசியல் அமைப்பு சட்டத்தில் அனைவரும் சமம் என்பது அடிப்படை அம்சம் என குறிப்பிடபட்டுள்ளது. விதி 15 (2) இன் படி மாநிலங்கள் எந்த ஒரு குடிமகனையும் மதம், இனம், சாதி, பாலினம் மற்றும் பிறந்த இடம் அல்லது அவற்றில் ஏதேனும் ஒன்றின் அடிப்படையில் பாகுபாடு காட்ட தடை உள்ளது. மனுவில் இந்த கேள்வியை டெல்லியின் உச்ச நீதிமன்றத்தின் பிரபல வழக்கறிஞர் டாக்டர் ஏ.பி. சிங் எழுப்பினார்.

டாக்டர்.ஏ.பி.சிங், பெரும்பாலான மாநில அரசுகள் மத்திய அரசின் அரசாணையை ஏற்றுக்கொண்டு தங்கள் மாநிலங்களில் பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள மக்களுக்கு 10% இட ஒதுக்கீட்டை செயல்படுத்துகிறது, அதேசமயம் தமிழ்நாட்டில் இதை செயல்படுத்த அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதன் காரணமாக தமிழ்நாட்டில் 45 லட்சத்திற்கும் அதிகமான ராஜ்புத் பொந்தில் குடும்பங்கள் மற்றும் பொது சாதியைச் சேர்ந்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புகழ்பெற்ற வழக்கறிஞர் டாக்டர். ஏ.பி.சிங் அவர்கள் மேலும் கூறுகையில், டாக்டர். ஜி. பவானி சிங் அவர்கள் தலைமையிலான தமிழ் நாடு ராஜ்புத் பொந்தில் சங்கம் ஏற்கனவே இந்தியாவின் மாண்புமிகு ஜனாதிபதி, மாண்புமிகு பிரதமர், மாண்புமிகு தமிழக முதல்வர், தமிழக உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி, மாண்புமிகு தமிழக ஆளுநர் ஆகியோருக்கு கோரிக்கை மனுவை சமர்ப்பித்துள்ளது. ஆனால் நம் கோரிக்கைகளை பரிசீலிப்பதில் ஏற்பட்ட காலதாமத்தை கருத்திற் கொண்டு டாக்டர்..ஜி. பவானி சிங் மற்றும் தமிழ்நாடு ராஜ்புத் பொந்தில் சங்கத்தின்

# பொருளாதார ரீதியாக பின் தங்கிய மக்களுக்கு 10% இட ஒதுக்கீட்டிற்கான சட்டப் போராட்டம்.

## Dr.G.BHAVANI SINGH

சார்பாக பொருளாதார ரீதியாக பின் தங்கிய மக்களுக்கு 10% இட ஒதுக்கீடு தமிழ் நாடு மற்றும் ஒதுக்கீடு செய்யாத இதர மாநிலங்களில் கிடைக்க மாண்புமிக்க இந்திய உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

மத்திய அரசு கூட இது தொடர்பாக ஏற்கனவே உத்தரவு பிறப்பித்துள்ளது.

நன்றி ! வணக்கம்.

Dr.G.பவானி சிங்
தலைவர் - தமிழ் நாடு ராஜ்புத் பொந்தில் சங்கம்

**********************************************************



## கருத்துக்கள்

நம் சுய நலம் அற்ற-, தன் நிகரில்லா தலைவரின் வெற்றிக்கான பாதையில் மேலும் ஊக்கத்துடன் இணைந்து
ஒற்றுமையோடு பயணிப்போம். வெற்றி பெறுவோம்"

நாகேஷ்வர் சிங்,
தென் சென்னை மாவட்ட தலைவர்.

***

"அருமை அருமை தலைவரின் தலைமையில். அருமையான நிகழ்வு ஆனந்தப் பட்டேன்"

மோகன் சிங், கோவை

"நம் தலைவரின் தொலை நோக்கு பார்வையில் நம் சமுதாய வளர்ச்சிக்கு எடுத்துக்கொண்ட முயற்சிக்கு நல் வாழ்த்துக்கள்"

டாக்டர். ம கோவர்தன சிங்,
செயலாளர்,,தென் சென்னை பகுதி

***

"நம் தலைவர் நீதி மன்ற கதவை தட்டியுள்ளார். வெற்றி நிச்சயம் கிடைக்கும். இதன் பயனாக நம் சமுதாயத்தில் பின்தங்கியுள்ள பெறும்பாலானோர் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் பலன் பெறுவார்கள். தமிழ் நாடு ராஜ்புத் பொந்தில் சங்கத்தின் சார்பாக தலைவரின் எண்ணம், உழைப்பு, சமுதாய சேவைக்கு என்றும் நன்றி கடன் பட்டுள்ளோம்"

J.பிரகாஷ் சிங்
பொது செயலாளர்

***

"நல்ல முயற்ச்சி. தலைவரின் முயற்ச்சி வெற்றி பெற நல் வாழ்த்துகள். வாழ்க தலைவர் டாக்டர் பாவானி சிங் ஜி"

N.மகேந்திரநாத் சிங்,
மாநில செயற்குழு உறுப்பினர்.

***

."தலைவரின் வெற்றிக்கான பாதையில் ஒற்றுமையோடு பயணிப்போம். வெற்றி பெறுவோம்"

G.பாலாஜி சிங், சென்னை.

# பொருளாதார ரீதியாக பின் தங்கிய மக்களுக்கு 10% இட ஒதுக்கீட்டிற்கான சட்டப் போராட்டம்.

## Dr.G.BHAVANI SINGH

"நம் மாநிலத் தலைவர் அவர்களுக்கும் சுப்ரீம் கோர்ட் வழக்கறிஞர் அவர்களுக்கும் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.இந்த வழக்கின் சாராம்சம் கண்டு வியந்து போகின்றேன் 10 % இட ஒதுக்கீடு என்பது தமிழகத்தில் சுமார் 45 லட்சம் ராஜபுத்திர மக்களை மேன்மைக்கு கொண்டுவரும் என்று நம்புகின்றேன். மேலும் இவ்வழக்கு நல்ல முறையில் தீர்வு கிடைத்திட வேண்டுமென்பது அனைத்து ராஜபுத்திரர்களது ஆசையாக உள்ளது"

மோ.ரவிந்திரநாத் சிங்

***

"என் அன்பு உடன்பிறப்பே பவானி பையா அவர்களே வணக்கம் ஐயா. எங்களுக்காக தாங்கள், உங்களுக்காக நாங்கள், நமக்காக நாம் நியாயமான கோரிக்கைகளை ஒன்று சேர்ந்து வென்றுவிடுவோம் உடன்பிறப்புக்கு 10% க்கு கடிதம் தந்த மன்னவனே நீர் வாழ்க உங்கள் குலம் வாழ்க இந்தப் பெருமையெல்லாம் உங்களை சாரும் நன்றி."

வேலூர் மாவட்ட ராஜ்புத் பொந்தில் சங்கத்தின் தலைவர் தேவேந்திர சிங்.

***

"Thanks for our State TNRBAs bravery attempt through proper way in proper time. Congratulations for Bhaiyya ji"

L.Ragunath,
State Executive Committee Member,

***

நமக்கு நல்ல தீர்ப்பை தலைவர் பெற்று தருவார் என்ற நம்பிக்கை அனைவருக்கும் உள்ளது. வெற்றி நமதே என காத்திருப்போம் நன்றி நன்றி நன்றி.

V.ரவி சந்தர் சிங், புதுக்கோட்டை மாவட்ட தலைவர்,, நில நிர்வாக குழு உறுப்பினர்.

***

"2020 ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஓசூரில் நடை பெற்ற கூட்டத்தில் விதை நட்டவர் இன்றைய தினத்தில் அறுவடை செய்ய நாள் குறிக்க முயற்சி மேற்கொண்டுள்ளார். இது ஒரு சரித்திர இமலாய சாதனை."

K. விஜயகுமார் சிங்,
மாநில துணை தலைவர்.

***

"நம் தலைவரின் சமுதாயத்திற்காக மேற்கொள்ளும் வளர்ச்சி பணிகளில் முக்கியமானது. நமது சங்கம் சட்ட போராட்டத்துக்கும் ஆய்த்தமாகி விட்டது என்று தெரிகிறது. வெற்றி பெற வாழ்த்துக்கள்."

K.யஷ்வந்த் சிங், தலைமை நிலைய செயலாளர்.

***

# தமிழ்நாடு அரசிடம் நம் சங்கத்தின் கோரிக்கை..1

தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு 20.06.2021 அன்று நம் தலைவர் டாக்டர். G.பவானி சிங் அவர்கள் அனுப்பி வைத்த கோரிக்கை மனு.

98427 22263

Reg. No. (Old 326/69) New. 10/2019

**TAMILNADU RAJPUT BONDIL ASSOCIATION**

Bhavani's Grandpalace, Outer Ring Road, HOSUR - 635 109.
E-mail : bhavanisingh.hosur@gmail.com

**Dr. G. Bhavani Singh**

State President - Tamil Nadu

Date :............................... 26.06.2021

பெறுநர்
மாண்புமிகு முதல்அமைச்சர் அவர்கள்
தமிழ் நாடு அரசு தலைமைச் செயலகம்
புனித ஜார்ஜ் கோட்டை , சென்னை - 600 009

பொருள் : ராஜா தேசிங் அவர்களுக்கு வெண்கல திரு உருவ சிலையும் ஒரு மணி மண்டபமும் அமைப்பது தொடர்பாக

மாண்புமிகு முதல்அமைச்சர் ஐயா அவர்களுக்கு, வணக்கம்

ராஜா தேசிங்கின் வம்சா வழியான நாங்கள் ராஜ்புத் பொந்தில் இனத்தை சார்ந்தவர்கள். கடந்த 2015 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி எங்கள் சமூகத்தினர் சுமார் 45 லட்சம் நபர்கள், தமிழ் நாட்டில் இருந்தோம். தற்பொழுது 50 லட்சத்திற்கும் மேல் இருக்கிறோம். நாங்கள் பத்து தலைமுறைகளுக்கும் மேலாக ராஜா தேசிங்கின் காலத்திலிருந்து தமிழ் மண்ணிலும் , தமிழகத்தில் வாழ்ந்து வருகிறோம். எங்களது சமூகத்தின் இரண்டு கோரிக்கைகளை மட்டும் தங்கள் முன் வைக்கிறோம்.

எங்களது சமூகத்தின் முன்னோடியான மாவீரன் ராஜா தேசிங் வாழ்ந்த விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் அவருக்கு ஒரு மணிமண்டபம் அன்னாரின் திருஉருவ வெண்கல சிலையோடு அமைக்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 3 ம் தேதி மாவீரன் ராஜா தேசிங்கின் நினைவு நாள் அரசு விழாவாக நடத்த கோருகிறோம்.

ராஜா தேசிங்கின் துணைவியரான ராணி பாய் ராணி பேட்டையில் உடன்கட்டை ஏறி உயிர்த்தியாகம் செய்துள்ளார்கள். அன்னாரை போற்றும் வகையில் அவர் நினைவாக தோன்றிய ராணி பேட்டையில் அன்னாருக்கு ஒரு மணிமண்டபமும் ஒரு வெண்கல திரு உருவ சிலையும் அமைத்து தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

இந்த இரண்டு கோரிக்கைகளையும் பரிசீலித்து விரைவில் ஆவண செய்தால் மிகவும் நலமாக இருக்கும் . தங்களது இந்த செயலை வாழ்நாள் முழுவதும் மறக்க மாட்டோம். மேலும் தங்களுக்கு உண்மையாகவும் , விசுவாசமாகவும் என்றென்றும் இருப்போம்.
என்றென்றும் உங்கள் அன்பு மறவாத

G.Bhavani Singh

டாக்டர் ஜி. பவானி சிங் - மாநில தலைவர்
தமிழ் நாடு ராஜ்புத் பொந்தில் சங்கம்.

# NEWS FLASH

**TAMIL NADU RAJPUT BONDIL ASSOCIATION**
**(Reg.No: 10/2019)**

Ref.No: TNRBA/GEN/2021/14.
Date: 04.07.2021

பொருள்: செஞ்சியில் அமைச்சரிடம் கோரிக்கை மனு சமர்பிப்பு.

இன்று தமிழ் நாடு ராஜ்புத் பொந்தில் சங்க செயற்குழுவின் முக்கிய நிர்வாகிகள் -
தலைவர் டாக்டர்.G.பவானி சிங்,
உப தலைவர்கள் திரு.S.இந்தர் சிங்,
திரு.K.விஜயகுமார் சிங்,
பொது செயலாளர் திரு.J.பிரகாஷ் சிங்,
இணை செயலாளர் திரு.G.ஸ்ரீதர் சிங்,
துணை செயலாளர் திரு.E.ராஜேந்தர் சிங்,
தலைமை சங்க செயலாளர்
திரு.K.யஷ்வந்த் சிங் ஆகியோர் தமிழ் நாடு அரசு சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு செஞ்சி. K.S. மஸ்தான் அவர்களை செஞ்சி விருந்தினர் மாளிகையில் சந்தித்து தமிழ் நாடு ராஜ்புத் பொந்தில் சங்கத்தின் சார்பாக கோரிக்கை மனு ஒன்றை அளித்தார்கள்.



மனுவில்...

1. பொந்தில் இனத்தவரான நம்மை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருந்து நீக்கி மிகவும் பிற்படுத்தபட்டோர் பட்டியிலிலோ அல்லது பிற்படுத்தப்பட்ட சிறுபான்மையினர் பட்டியலிலோ சேர்த்தல்.

2. நம் சமூக முன்னோடியான ராஜா தேசிங்கிற்கு செஞ்சியில் வெண்கல திருஉருவ சிலை மற்றும் மணிமண்டபம் அமைத்தல்.

3. ராஜா தேசிங்கின் துணைவியாருக்கு ராணிபேட்டையில் வெண்கல திருஉருவ சிலை மற்றும் மணிமண்டபம் அமைத்தல். போன்ற முக்கியமான மூன்று கோரிக்கைகளை சமர்பித்தோம். மனுவை முழுமையாக படித்த அமைச்சர் ஆவன செய்வதாக நம்பிக்கை அளித்தார்.



இந்த நிகழ்வின் போது பொன்னங்குப்பத்தை சேர்ந்த திரு.பிரதாப் சிங், பொன்னங்குப்பம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் திரு. பாபு உதய் சிங், செஞ்சி கிளை சங்கத்தை சேர்ந்த திரு.ரவிசந்தர் சிங்,

# NEWS FLASH



மேலச்சேரியை சேர்ந்த திரு.ஜெய்சிங், கடலூர் மாவட்ட தலைவர் திரு.S.ராஜேஷ், ஓசூர் இளைஞர் அணியை சேர்ந்த திரு.அசோக் குமார் சிங், திரு.சங்கர்,






பண்ருட்டி இளைஞர் அணியை சேர்ந்த திரு.C.பிரவீந்தர் சிங், பண்ருட்டி சங்க மூத்த உறுப்பினர் திரு.B.குபேர் சிங், தென்சென்னை புறநகர் பகுதியை சேர்ந்த திரு.விக்ரம் சிங் ஆகியோர் உடனிருந்தனர்.

நம் கோரிக்கைகள் வெற்றி பெற நம் தலைவர் டாக்டர்.ஜி.பவானி சிங் அவர்கள் தலைமையில் ஒறுங்கிணைந்து, உழைத்து வெற்றி பெறுவோம்.

நன்றி, வணக்கம்.

J.பிரகாஷ் சிங்,
பொது செயலாளர்,
தமிழ் நாடு ராஜ்புத் பொந்தில் சங்கம்

# தமிழ் நாடு அரசிடம் நம் சங்கத்தின் கோரிக்கை..2

தமிழ் நாடு அரசு சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு செஞ்சி K.S.மஸ்தான் M.L.A அவர்களிடம் 04.07.2021 அன்று சமர்பித்த கோரிக்கை மனு.

98427 22263

Reg. No. (Old 326/69) New. 10/2019

**TAMILNADU RAJPUT BONDIL ASSOCIATION**

Bhavani's Grandpalace, Outer Ring Road, HOSUR - 635 109.
E-mail : bhavanisingh.hosur@gmail.com

**Dr. G. Bhavani Singh**
State President - Tamil Nadu

பெறுநர்
மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை - 600 009

*Date* :.....04:07:2021.........

பொருள் : மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இணைப்பது மற்றும் ராஜா தேசிங்கிற்கும் அவரது துணைவியரான ராணி பாய் அவர்களுக்கும் வெண்கல திரு உருவ சிலையும் மணி மண்டபமும் அமைப்பது தொடர்பாக

மாண்புமிகு அமைச்சர் ஐயா அவர்களுக்கு, **வணக்கம்**

ராஜா தேசிங்கின் வம்சா வழியான நாங்கள் ராஜ்புத் "**பொந்தில்**" இனத்தை சார்ந்தவர்கள். நாங்கள் பத்து தலைமுறைகளுக்கும் மேலாக சுமார் 4½ லட்சத்தில் இருந்து 5 லட்சம் குடும்பத்தினர் ராஜா தேசிங்கின் காலத்திலிருந்து தமிழ் மண்ணிலும், தமிழகத்தில் வாழ்ந்து வருகிறோம். எங்களது சமூகத்தின் சார்பாக மூன்று கோரிக்கைகளை மட்டும் தங்கள் முன் வைக்கிறோம்.

தற்பொழுது எங்கள் இனம் "**பொந்தில்**" என்ற பெயரில் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ளது. எங்கள் இனத்தில் பெரும்பாலோனோர் விவசாயம் மற்றும் கூலித்தொழில் ஈடுபட்டு மிகவும் ஏழ்மையான நிலையில் இருக்கின்றனர். எங்கள் இனத்தவர் கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் பயன் பெறுவதற்கு உதவியாக தாங்கள் தயவு கூர்ந்து "**பொந்தில்**" என்ற எங்கள் இனத்தவரை பிற்படுத்தப்பட்டோர் பட்டியிலில் இருந்து நீக்கி மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியிலிலோ அல்லது பிற்படுத்தப்பட்ட சிறுபான்மையினர் பட்டியலிலோ தயவு கூர்ந்து இணைக்க வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்

எங்களது சமூகத்தின் முன்னோடியான மாவீரன் ராஜா தேசிங் வாழ்ந்த விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் அவருக்கு ஒரு மணிமண்டபம் அன்னாரின் திருஉருவ வெண்கல சிலையோடு அமைக்க வேண்டும்.
ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 3 ம் தேதி மாவீரன் ராஜா தேசிங்கின் நினைவு நாள் அரசு விழாவாக நடத்த கோருகிறோம்.
ராஜா தேசிங்கின் துணைவியரான ராணி பாய் உடன்கட்டை ஏறி உயிர்த்தியாகம் செய்த இடம் ராணி பேட்டை என்று அழைக்கப்படுகிறது. தற்பொழுது ராணி பேட்டை மாவட்டமாக உதயமாகியுள்ளது. அன்னாரை போற்றும் வகையில் அவர் நினைவாக தோன்றிய ராணி பேட்டையில் அன்னாருக்கு ஒரு மணிமண்டபமும் ஒரு வெண்கல திரு உருவ சிலையும் அமைத்து தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

இந்த மூன்று கோரிக்கைகளையும் பரிசீலித்து விரைவில் ஆவண செய்தால் மிகவும் நலமாக இருக்கும் தங்களது இந்த செயலை வாழ்நாள் முழுவதும் மறக்க மாட்டோம். மேலும் தங்களுக்கு உண்மையாகவும், விசுவாசமாகவும் என்றென்றும் இருப்போம்.
என்றென்றும் உங்கள் அன்பு மறவாத

டாக்டர் ஜி. பவானி சிங் - மாநில தலைவர்
தமிழ் நாடு ராஜ்புத் பொந்தில் சங்கம்.

# HAPPY EVENTS OF OUR EXECUTIVE COMMITTEE MEMBERS



BIRTH DAY: 02.04.2021

SHRI.R.KARTHIK

STATE YOUTH WING SECRETARY



BIRTH DAY: 05.04.2021

SMT.SHOBHARANI BALAJI SINGH

WOMENS WING STATE PRESIDENT



BIRTH DAY: 15.04.2021

J.PRAKASH SINGH

GENERAL SECRETARY,
DIRECTOR -TNRBA WEBSITE & NEWS LETTER

# HAPPY EVENTS OF OUR EXECUTIVE COMMITTEE MEMBERS



MARRIAGE ANNIVERSARY DAY: 25.04.2021

SHRI.SRIDHAR SINGH - SMT.GIRIJA BAI

STATE ASST. SECRETARY



BIRTH DAY: 03.05.2021

SHRI.K.VIJAYA KUMAR SINGH

STATE VICE PRESIDENT & SECRETARY NORTH CHENNAI DIST.



BIRTH DAY: 12.05.2021

SHRI.V.RAVICHANDHAR SINGH

STATE DISIPLINE COMMITTEE MEMBER & PUDUKKOTTAI DIST PRESIDENT

# HAPPY EVENTS OF OUR EXECUTIVE COMMITTEE MEMBERS




**MARRIAGE ANNIVERSARY DAY: 22.05.2021**

**SHRI. V.SURESH BABU SINGH - SMT.VIMALA BAI**

**STATE VICE PRESIDENT & COVAI DIST.PRESIDENT**



**BIRTH DAY: 16.06.2021**

**SHRI.G.SRIDHAR SINGH**

**STATE JOINT SECRETARY & KRISHNAGIRI DIST. SECRETARY**

Tamil Nadu Rajput Bondil Association and TNRBA News Letter team wishing TNRBA Executive Committee Members on their Birthdays and Marriage Anniversary Days.

தமிழ் நாடு ராஜ்புத் பொந்தில் சங்கம் மற்றும் TNRBA செய்தி மடல் (மின் இதழ்) குழு, TNRBA நிர்வாக குழுவினரின் பிறந்த நாள் மற்றும் திருமண நாள் விழாவிற்க்கு நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

# OUR DEEP CONDOLANCES



**SHRI. MUNISUNDAR SINGH**

**VICE PRESIDENT - TNRBA**

20.05.2021



# கண்ணீர் அஞ்சலி



மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய திரு. முனிசுந்தர் பையா அவர்களின் மறைவு நம் சமூகத்துக்கும், சங்கத்துக்கும் மிக பெரிய இழப்பாகும்.

தமிழ் நாடு ராஜ்புத் பொந்தில் சங்கம் உருவாக அவர் முதன்மை காரணகர்த்தாவாக இருந்தார். அனைவருக்கும் தொடர்ச்சியாக கடிதங்கள் மூலம் சமூகத்தின் நிலை, தேவையான மாற்றங்கள் பற்றி தெரியபடுத்திக் கொண்டிருப்பார். பணத்தை பெரிதென எண்ணாமல் சங்க வழக்கில் முடிந்த உதவிகள் செய்து, வழக்கு விசயத்தில் தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்டு வழக்கை முன்னேற்ற பாதையில் கொண்டு சென்றார்.

நேர்மையாக இருப்பார், பிறரும் நேர்மையாக இருக்க வேண்டுமென எதிர்பார்ப்பார். எல்லா சங்க கூட்டத்திலும் தவறாமல் கலந்துக் கொள்வார். மனதில் பட்டதை தயக்கம் இல்லாமல் வெளிப்படையாக பேசுவார். இளைஞர்களை சமூகபணியில் அதிகம் ஈடுபடுத்த வேண்டும், சமுதாயத்தை ஒறுங்கிணைத்து முன்னேற்ற பாதையில் கொண்டு செல்ல வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருப்பார்.

10 தினங்களுக்கு ஒருமுறை தவறாமல் பேசிவிடுவார், சங்க செயல்பாடு,அதிலுள்ள முன்னேற்றம் பற்றி கேட்டறிவார். அனைவரிடமும் மரியாதையுடன் பேசுவார். Mr. பவானி சிங்....என்று அவர் கூறும் வார்த்தை என் மனதில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. அதனை அவரிடமிருந்து கேட்கும் பாக்கியத்தை இழந்து விட்டேன்.

அவரையும் மறக்க இயலாது, அவர் வார்த்தைகளையும் மறக்க இயலாது, அவர் ஆற்றிய பணிகளையும் மறக்க இயலாது..மறக்கவும் கூடாது.

வழக்கில் வெற்றிப் பெற்று அனைவரும் ஒற்றுமையுடன் நம் சங்கத்தை வலப்படுத்தி, அதன் மூலம் நம் சமூகத்தை வளர்ச்சி பாதைக்கு கொண்டு செல்வதே அவருக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலியாக இருக்கும்.

முனிசுந்தர் சிங் பையா உங்களை மறவோம்..உங்கள் எண்ணங்கள் மற்றும் கனவுகளை நிச்சயம் நிறைவேற்றுவோம்.

இப்படிக்கு,
Dr.G.பவானி சிங்,
தலைவர் -TNRBA





# கண்ணீர் அஞ்சலி



நமது சங்கத்தின் துணைத் தலைவர் திரு.M.முனிசுந்தர் சிங் பையா மறைந்துவிட்டார் என்பதை மனது தாங்கிக்கொள்ள முடிவில்லை. நம் சமுதாயமே கண்ணீர் விட்டு கலங்கி நிற்கின்றது.

இந்த சமுதாயத்திற்காக உண்மையாக உழைத்த உத்தமர். ஒரு தவறு செய்தால் அதை தெரிந்து செய்தால் அவன் தேவன் என்றாலும் விடமாட்டேன் , என்ற கொள்கைக்கு சொந்தக்காரர். கடந்த 30 வருடத்திற்க்கு மேலாக அவரோடு நானும் நம் சமுதாயக் கூட்டங்களிலே கலந்து கொண்டுள்ளேன். அவருடைய அதிரடியான பேசிக்கள் கேள்விகள் ஒவொன்றும் பூகம்பத்தை போன்றும் சுனாமியைப் போன்றும் பெறும் அதிர்வை எதிறாளிகலுக்கு ஏற்படுத்தும் அவருடய வாதம் ஒவ்வொன்றும் முதிர்ச்சி உடைய வக்கீலின் வாதமாய் காட்சி அளிக்கும்.

இடி மின்னல் மழை யோடுவீசிய பெறும் புயல் இன்று அமைதியடைந்து விட்டதே. உங்கள் அதிரடி பேச்சை கேட்க ஆசை பட்டுத்தான் கொடிய கொறொனவும் உங்கள் உயிரை கொள்ளை அடித்து போய் விட்டதோ.

பையா உங்கள் உடலுக்கு மரணம் வந்தது உண்மை ஆனால் உங்களின் பெயருக்கும் புகழுக்கும் இந்த சமுதாயத்தில் என்றைக்கும் மரணமில்லை.

S.இந்தர்சிங்

மாநில துணைத் தலைவர்.



சமுதாயத்தில் எவ்வளவு பெரிய மனிதர்கள் தவறு செய்யதாலும் அதைத் தட்டி கேட்டுக்கும் சர்வ வல்லமை படைத்தவர் "நாடென செய்தது நமக்கு.... கேள்விகள் கேட்பது எதற்கு....நீயென செய்தாய் அதற்கு... என நினைத்தால் நன்மை சமுதாயத்திற்கு" என்ற குறிக்கோளுடன் உழைத்த உத்தமர்.......

கே. விஜயகுமார் சிங்
மாநில துணைத் தலைவர்.

கே.பாலாஜி சிங், பீ.கே.பாலாஜி சிங்

வடசென்னை மாவட்டம்

*****

நம் சங்கத்திர்க்கோர் துக்கநாள்,
சங்கத்தின் தூண் சாய்ந்தது, நம் குல போர் வாள் உறையில் புகுந்தது.

நாகேஷ்வர சிங்
தலைவர், தென் சென்னை மாவட்டம்.

*****

சங்கத்தின் வளர்ச்சியில் அக்கறை உள்ள காரணத்தினால் அனைத்து நிகழ்ச்சிகளிலும் தவறாமல் கலந்துகொண்டு ஊக்கத்தை அளித்தார். பழகுவதில் உரிமை கொண்டு பழகுவது என்பது சிறப்பானது. அவர் என்னிடம் பழகியது இது போன்றுதான் இருந்தது. இவரின் வெற்றிடம் இனி நிரப்புவது சற்று சிரமம்தான்.....

டாக்டர்
ம கோவர்தன சிங்,
செயலாளர்- தென் சென்னை மாவட்டம்



# கண்ணீர் அஞ்சலி



அடுத்த தலைமுறை நிர்வாகிகளுக்கெல்லாம் ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியவர், நம் சமூகத்திற்காக தன் இறுதி மூச்சுள்ளவரை கடமையாற்றி சென்றுள்ள தன்னலன் கருதாத அந்த கர்ம வீரரை வணங்கி அவர் ஆற்றிச்சென்ற பணிகளை செம்மை குறையாது நாம் ஒற்றுமையுடன் தொடர்ந்து செயலாற்றுவதே அவருக்கு நாம் அளிக்கும் மரியாதை அஞ்சலியாகும்....

N.பிரேமானந்த சிங் (பாலா) மற்றும் அனைத்து நிர்வாகிகள் திருநெல்வேலி மாவட்ட சங்கம்.

*****

சங்கத்தின் மூத்த ஆலோசகரும், து.தலைவர் முனிசுந்தர் சிங்ஜியின் பிரிவு, சங்கத்தின் வழிகாட்டுதலுக்கு, பேரிழப்பு....

L.Ragunath Singh,
TNRBA - DHARMAPURI DIST.

*****



திருமதி.பத்மா சுந்தர் சிங் அண்மையில் (20.05.2021) மறைந்த திரு.முனிசுந்தர் சிங் அவர்களின் மனைவி கொரோனா தாக்குதலால் இன்று (28.05.2021) மாலை திருவல்லிகேணி, சென்னையில் காலமானார். திருமதி பத்மா சுந்தர் சிங்கின் தந்தையும் கடந்த ஞாயிற்றுக்கிழமை (23.05.2021) அன்று கொரோனா காரணமாக சென்னையில் காலமானார் என்றும் தெரியவந்துள்ளது. மறைந்த திரு.முனிசுந்தர் சிங் குடும்பத்தாருக்கும், திருமதி. பத்மா சுந்தர் சிங் அவர்கள் குடும்பத்தாருக்கும் எங்கள் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம். இறைவனடி சேர்ந்தவர்களின் ஆன்மா இறைவன் காலடியில் இளைப்பாற பிரார்த்திக்கிறோம்.

தமிழ்நாடு ராஜ்புத் பொந்தில் சங்கம்



# COMMERCE STREAM AFTER 12TH STANDARD


**DR. M. GOVARDHANA SINGH**

SECRETARY, TNRBA, SOUTH CHENNAI BRANCH


A good life depends on good education. Good education depends on right combination of teacher and student, school and place of its existence, individual talent and use of those talent at the right time, influence of relatives and friends, cost benefits of the course, and the paramount importance of good understanding of members in the family. The ensuing pages give a clear sketch of courses and ultimate benefits that emanates from the proper selection of a course after completing twelfth standard.

## Origin

The Word education is derived from **Latin word - Educare, Educere & Educatum**. **Educare** means to nourish, to bring up. The word. **Educere** means to lead froth, to draw out and **Educatum** means the act of teaching or training. In India, the credit for bringing the modern school system goes to **Lord Thomas Babington Macaulay** in the **1830**.

## Meaning

Education is an instrument which provides people with **"adequate knowledge, skill, technique, and information".** It assists them to know their rights and duties towards their family, society as well as the nation. It cultivates them to grow the required skills to fight against injustice, violence, corruption and many other bad elements or components in the society. A good education to depend on a good level of teaching in the class room.

## Knowledge

Knowledge is more important for doing a work and making others to be benefitted from that work. It can be acquired by constantly working towards it, on a regular basis which will make you to master the work. One who got good education is not poor in anything, but in fact a highly rich person.

## Skill

A good education will result in doing something so competently with minimum of efforts and time to get the best in anything. It goes with a long hours and days of practice with perseverance.

## Technique

Undoubtedly a technique is a particular method of doing an activity, usually, a method that involves use of practical knowledge and personal skills.

## Information

Generally information refers to facts related to an individual or the situation with reference to particular period of time.

## Outcome of education

A good educated person is **an asset to the family, organization and to the society** in many ways. In the case of **family circle**, he will play an active role in maintaining a good family atmosphere by moving freely and taking everything in a positive way. He will try to solve any kind of family problems by volunteering himself at the right time.

The **organization** where he is working will grow naturally with his newer ideas. Given a chance, he will capitalize the prevailing situation for the benefits of the company. He will take steps to increase the reputation of the company by introducing new and quality products with reasonable price and also supplying at regular intervals. The knowledge, skills and the information gained can be well adjusted in increasing the employment of opportunities to people by starting more and more industries taking the role of an entrepreneur. This will lead to increasing the standard of living of the people in **the society**



# COMMERCE STREAM AFTER 12TH STANDARD

DR. M. GOVARDHANA SINGH

SECRETARY, TNRBA, SOUTH CHENNAI BRANCH

## Definition:

According to **Nelson Mandela**, "Education is the most powerful weapon which you can use to change the world".

In the words of **John Dewey**, "Education is not preparation for life, education is life itself".

**Malcolm X** opined that "Education is the passport to the future, for tomorrow belongs to those who prepare for it today".

From the view point of **Benjamin Franklin**, "An investment in knowledge pays the best interest".

## Planning after 12th

Generally there is a mind boggling questions about the steps to be taken after completing 12th commerce stream with or without mathematics. The various steps relates to "the selection of right course, nature of college, place of joining, teaching facilities, cost of learning and avenues for enhancing the skills for the betterment of future life". If due care is given to the above **definitions** of eminent people about education, it may not be a difficult task to select a course.

Before selecting a course, students are expected to possess certain skills and should have prepared themselves in acquiring those skills. If these things are good, then, all other things related to those skills will naturally fall in line without any problem

## Personal skills

Before selecting a course, students should possess certain **personal skills** which will be considered to be the basis for the selection of a good course. Some of the important skills expected are ***"Good communication skills, Leadership skills, Confidence, Adaptability, Time Management, Problem solving ability, Critical and Analytical thinking, Multi-tasking, and Thinking capacity".*** These skills are, naturally, playing a reasonable role in the selection of a job profile which supports their future life. The **job profiles** are to be in line with the **job recruiters** in the society.

## Job profiles and job recruiters

The various job profiles such as "Budget Analyst, Auditor, Chartered Management Accountant, Chief Financial Officer, Business Consultant, Finance Manager, Stock Broker, Production Manager, and Management Accountant" are to be sincerely matched with the various job recruiters in the society, namely, "Government Banks, Private Banks, Foreign Banks, TCS, TFC, HCL. IBM, Deloittee, Microsoft, Ernest and Young, Hewlett and Packard, and Reliance".

## Specializations

Various specializations are available under commerce courses. To name a few, such as ***"Accounting and Finance, Banking and Finance, Accounting and Taxation, Actuarial Science, Business Administration, Applied Economics, E-Commerce, Financial Accounting, Banking and Insurance, Human Resources, Entrepreneurship, Accounting and Auditing".*** In the 12th commerce stream, a careful thought is given in selecting a right combination of subjects, then there is no problem in going after UG, PG, Professional and Doctoral stage as detailed in the above table.

Some of the eminent colleges that are available in the society should be given a due weightage. People who excelled in commerce fields and their nature of working after having got some degree or degrees, and how they developed their skills and their life and to what extent society got benefitted from them should be analyzed carefully before selecting the course.



# COMMERCE STREAM AFTER 12TH STANDARD

**DR. M. GOVARDHANA SINGH**

SECRETARY, TNRBA, SOUTH CHENNAI BRANCH

To top the all, highest paying jobs are to be selected which should match our priorities in the selection the course.

**Various Courses**

Students who wants to pursue **UG** in Commerce they should have completed their Class 12 or its equivalent level of education in the relevant stream from a recognized board and who have studied subjects such as Accounts, Mathematics and Economics. The duration of the UG course is three years.

To seek admission in the **PG** level Commerce course, students should have completed their UG in Commerce stream from a recognized University/College and should have secured a minimum of 50% aggregate or equivalent in graduation. The duration of the PG course is two years.

At **Doctoral stage** it all depends on eligible marks in the UG and PG level and the entrance test conducted by the University concerned. The duration is minimum of 3 years to maximum 5 years, and it may be extended to another one or two years depending on the concerned University's rules and regulations.

At the competitive level **IAS** examination occupies a prominent place which helps in exposing one's knowledge by securing high position in this examination, as a District Collector. The next one considered good in the job opportunity is **Group - A** Officer post in RBI is also worth mentioning here.

**Eminent people in Commerce fields**

A bird's eye view of the people who excelled in the commerce fields and to what extent they contributed to the development of one's own life and also the life of others. What kind of organizations they developed in the society and the nature of benefits it resulted in the society in particular and the country in general.

**OUR THANKS & BEST WISHES TO DR.M.GOVARDHANA SINGH FOR GUIDING & SHARING EDUCATIONAL TIPS TO OUR YOUNGSTERS**

**TNRBA & NEWS LETTER TEAM**

| Level | Course | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| Under Graduate | B.Com | BBA | BBM | BBS | BMS | BBL | BCS | BA Corporate |
| Post Graduate | M.Com | M.Phil. | MBA | | | | | |
| Professiona l Courses | Chartered Accountant | Cost and Management Accountant | Company Secretary | Certified Financial Accountant | | | | |
| Doctoral | Commerce | Economics | | | | | | |



# COMMERCE STREAM AFTER 12TH STANDARD


**DR. M. GOVARDHANA SINGH**

**SECRETARY, TNRBA, SOUTH CHENNAI BRANCH**


| S.NO. | NAME | QUALIFICATIONS | COMPANY |
|---|---|---|---|
| 1 | Rakshit Desai | M.Sc., London School of Economics and MBA from Griffith University. | MD, FCm Travel solutions and Flight shop. |
| 2 | Nishant Rao | MBA from MIT Sloan University and Computer Science from University of Texas at Austin | MD, LinkedIn India |
| 3 | ManjEIuPshyw | MBA (FMS) | AD, Cadbury Dairy Milk Equity |
| 4 | Kedar Lele | MBA, ISB Hyderabad, PGDPC, Mudra Institute of Communication, and B.Com from The Bhopal School of Social Sciences. | VP, Modern Trade, e- Commerce and Institutional Business, Hindustan Unilever. |
| 5 | Amisha Jain | MBA from INSEAD, MS Electrical Engineering from University of Texas Austin and BE Electronics Engineering from MS University | COO, Product Merchandising and Brand Management, Arvind Internet. |
| 6 | Sioddharth Adya | MBA from Asian Institute of Management, Manila and BA Economics from Delhi University, | VP, Regional Lead – South Asia, APL Logistics. |
| 7 | Nitin Prasad | MBA from INSEAD, BSEE from Georgia Institute of Technology | MD, Shell Lubricants India, Bangladesh and Sri Lanka. |
| 8 | Ashish Hemrajani | MBA from Sydenham College | CEO, Big Tree Entertainment |
| 9 | Nitin Kukreja | Chartered Accountant, India | President and Head of Sports, STAR India |
| 10 | Sanjay Gupta | MBA from Harvard and Economics from SRCC | Head Marketing for Youth, Wellness, Marico. |

## Thinks to do after selection of a course:

The term **TEA** (**Time, Energy and Attention**) plays and important role in reaping the benefits of the course so selected. Once the decision is taken with regard to a course, benefits from the course arises only after putting more and **more efforts**. In preparation, do not stand and look back, just proceed and see your desired goal only, come what may. When something goes wrong or falling things behind you, just take time to rectify rather than be dejected, just take a brief break and start confidently. There may be a slippery or overlooking of some aspects on your part and falling things behind is considered to be a **natural phenomenon**. There should not be any **procrastination** in efforts. Start every day



# COMMERCE STREAM AFTER 12TH STANDARD

DR. M. GOVARDHANA SINGH
SECRETARY, TNRBA, SOUTH CHENNAI BRANCH

## Top Commerce Colleges and Eminent People in India :

| S.NO. | NAME | COLLEGE | FIELD |
|---|---|---|---|
| 1 | Amartya Sen | Presidency College, Calcutta | Economics |
| 2 | Kumar Mangalam Birla | Univesity Of Mumbai, And ICAI | Business And Accountancy |
| 3 | Prannay Roy | Delhi School Of Economics | Journalist |
| 4 | S. Gurumurthy | University Of Madras | Chartered Accountant |
| 5 | Mohandas Pai | Bangalore University, ICAI and Bangalore University, School Of Economics | Commerce |
| 6 | Deepak Parekh | University Of Mumbai and CA From ICAEW, London | Banking |
| 7 | Vishwanathan Anand | University Of Madras | Sports – Chess |
| 8 | Lakshmi Niwas Mittal | St. Xavier’s College, Kolkata | Steel Magnate |

## Highest paying jobs :

| S.NO. | NATURE OF JOB | EARNINGS PER ANNUM (IN LAKHS) |
|---|---|---|
| 1 | Chartered Accountant | 6 to 10 |
| 2 | Cost Accountant | 4 to 7 |
| 3 | Company Secretary | 6 to 9 |
| 4 | Chartered Financial Analyst | 6 to 9 |
| 5 | Certified Public Accountant | 7 to 9 |
| 6 | Actuary | 7 to 9 |
| 7 | Professional Accountants | 6 to 8 |
| 8 | Retail Manager | 5 to 7 |
| 9 | Personal Financial Advisor | 5 to 6 |
| 10 | Investment Banker | 7 to 12 |

A good education yields a satisfying life with ethical way of earnings, leading to creation of decent quantum of wealth which will be useful to all. A good education so gained will make an individual a pleasing personality in all walks of life, be it in an Organization, Family, and an Association of Friends.

**- Dr. M. Govardhana Singh**



அனைவருக்கும் வணக்கம்.

கொரோனா என்ற கொடிய வைரஸ் நோயிலிருந்து நம்மையும், நம் குடும்பத்தையும் காப்பற்றிக் கொள்ள வேண்டிய காலகட்டத்தில் உள்ளோம், அதற்காக நம்மை நாமே தயார் செய்தும் வருகிறோம்.

அவசியமின்றி வீட்டை விட்டு போவதை தவிர்ப்போம்..,வீட்டுக்கு வெளியே உள்ள சமயங்களில், முக கவசம் அணிதல், சமூக இடைவெளியை கடைபிடித்தல் ஆகியவற்றை பின்பற்றுவோம்.. ,தடுப்பூசியை அவசியம் போட்டுக் கொள்ளுங்கள்.. நம் சமூக மக்களின் நலன் நமக்கு முக்கியம்.

நம் சமூக வளற்ச்சிக்கான நம் எண்ணங்கள், அதற்கான திட்டங்கள் வெற்றியடைய, நாம் எண்ணிக்கையில் வலு பெற வேண்டும். அது மெய்ப்பிக்ககூடிய வடிவத்தில் இருந்தால் தான் நாம் அரசாங்கத்திடம் தகுந்த ஆதாரத்துடன் உரிமை கோர முடியும். அதற்கு உங்கள் ஆதரவும், ஒத்துழைப்பும் மிகவும் அவசியம். இந்த ஊரடங்கு காலத்தில் வீட்டிலிருக்கும் வாய்ப்பை பயன்படுத்தி உங்கள் குடும்ப உறுப்பினர்கள் பற்றிய விபரங்களை (பெயர்,விலாசம், பிறந்த தேதி, கைபேசி எண், கல்வி, தொழில் பற்றிய தகவல்களை) உங்கள் மாவட்ட தலைவர்/ செயலாளர் வாயிலாகவோ அல்லது வாட்சப் / மின்னஞ்சல் மூலமாக நமது பொது செயலாளருக்கு அனுப்பி வைக்கவும்.

பொது செயலாளர் -திரு.J.பிரகாஷ் சிங்
வாட்சப்எண் : 8527073434
மின்னஞ்சல் முகவரி (இ.மெயில்): jp.triplicane@gmail.com

கோவையில் பெறப்பட்ட விபரங்கள், இணையதளத்தில் பதிவு செய்யபட்ட விபரங்கள் அனைத்தும் ஒறுங்கிணைக்க பட்டு தமிழ் நாட்டில் வசிக்கும் நம் சமுதாய மக்களின் டேட்டா பேஸ்(data base) உருவாக்கப்படும்.அது நமது சமுதாய வலிமையை பறைசாற்றக் கூடியதாகவும், நம் எதிர் காலத்தை தீர்மானிக்க கூடியதாகவும் இருக்கும்.

விபரங்கள் அனுப்பி வைப்பதில் உங்கள் அனைவரது ஒத்துழைப்பை நாடுகிறேன்.

நன்றி, வணக்கம்.

Dr.G.பவானி சிங்
தலைவர் - தமிழ் நாடு ராஜ்புத் பொந்தில் சங்கம்.



## <u>சுற்றறிக்கை</u>

Ref: TNRBA/GEN/2021/08 நாள்: 09.05.2021



பொருள்: மகாராணா பிரதாப் சிங் 481வது பிறந்த நாள் விழா.

அன்புமிகு அனைத்து ராஜபுத்திர சொந்தங்களுக்கும் மகாராணா பிரதாப் சிங் ஜெயந்தி நல்வாழ்த்துக்கள்.

வட இந்தியாவில், மேவார் இராஜ்ஜியத்தை ஆட்சி புரிந்த ராஜபுத்திர மன்னர் மகாராணா பிரதாப் சிங். 09.05.1540 அன்று கும்பல்கர், மேவாரில் பிறந்தார். ராஜபுத்திரர்கள் தொன்று தொட்டு போற்றிவரும் வீரம், நாட்டுப்பற்று மற்றும் சுய மரியாதை ஆகிய அருங்குணங்களுக்கு ஒரு மிகவும் சிறந்த எடுத்துக் காட்டாக மகாராணா பிரதாப் சிங் விளங்கினார்.

30 ஆண்டுகளுக்கு மேலாக போரிட்டும் எதிரி மன்னர்களால் அவரை கடைசி வரை வீழ்த்த இயலவில்லை. மகாராணா பிரதாப் சிங் வேட்டையாடும் பொழுது ஏற்பட்ட விபத்தால், சாவண்டில் 19.01.1597 அன்று மரணம் அடைந்தார்.

மகாராணா பிரதாப் சிங் ஒரு பெரும் நாயகனாக இந்தியர்களின் பார்வையில் விளங்குகிறார், அவர் தன் ராஜபுத்திர மக்களால் அதிகம் மதிப்பும் மற்றும் அன்பும் செலுத்தப் படுகின்றவராகவே விளங்குகிறார். இந்து வரலாற்றில் ஒரு இருளான அத்தியாயத்தில், மகாராணா பிரதாப் சிங் மட்டுமே தன் கௌரவம் மற்றும் கண்ணியம் கருதி தன்னந்தனியானாக உறுதிபட நின்றார். தனது கௌரவத்தை சுய பாதுகாப்பிற்காக ஒருபோதும் அவர் விட்டுக்கொடுத்ததே இல்லை. ராஜபுத்திர மக்களின் அடையாளமாக இன்றளவும் அவர் போற்றப் பட்டு வருகிறார்.

அந்த மாமன்னரின் 481 வது பிறந்த நாள் விழாவை இன்று (09.05.2021) தமிழ் நாட்டில் வாழும் அனைத்து பிரிவு ராஜபுத்திரர்களும் (பொந்தில், லால், லாலா, பிரசாத், தாக்கூர்) நினைவு கூர்ந்து, போற்றி, வழிபட்டு, கொண்டாடி வருகிறார்கள்.


தமிழ் நாட்டில் ராஜபுத்திர பொந்தில் சமூக மக்களின் உயர்வுக்காக பாடுபட்டு வரும் Dr.G.பவானி சிங் ஜி அவர்கள் தலைமையிலான நமது தமிழ் நாடு ராஜ்புத் பொந்தில் சங்கம், மகாராணா பிரதாப் சிங் அவர்களை அவரது பிறந்த நாளில் போற்றி வழி படுகிறது.

வாழ்க மாகாராணா பிரதாப் சிங் ! வளர்க மகாராணா பிரதாப் சிங் புகழ் !!

ஒன்று படுவோம்! உழைப்போம்!! இலட்சியத்தை அடைவோம்!!!

ஜெ.பிரகாஷ் சிங்,
பொது செயலாளர்,
தமிழ் நாடு ராஜ்புத் பொந்தில் சங்கம்.






The birth anniversary of the 13th king of Mewar, Shri.Maharana Pratap, is being observed across India on 13.06.2021. According to the English calendar, Maharana Pratap Jayanti falls on May 9 every year. However, the Hindu calendar shows the warrior king’s birth anniversary on the Tritiya tithi of Jyeshtha’s Shukla Paksha, and hence is being celebrated on June 13 this time.



Ref: TNRBA/GEN/2021/12 நாள்: 06.06.2021

**பொருள்: மருத்துவ உதவிக்கான வேண்டுகோள். நம் சமூக நலனுக்கான கூட்டு பிரார்த்தனை**

அனைத்து உறவுகளுக்கும் வணக்கம் !

ஒறுங்கிணைந்த வேலூர் மாவட்டம், துத்திப்பட்டு ராஜ்புத் பொந்தில் கிளை சங்க உறுப்பினர் திரு.பாபு சிங் (s/o. L.முனி சிங்) அவர்கள் இரு சிறுநீரகங்களும் பாதிக்கப் பட்டு மருத்துவ சிகிச்சை பெற்று வருகிறார்.

மாற்று சிறுநீரகம் பொருத்த மருத்துவர்கள் ஆலோசனைக்கு பின், திரு. பாபு சிங்கின் தாயார் திருமதி. சுக்கி பாய் அவர்கள் மகனுக்கு சிறுநீரக உறுப்பு தானம் செய்ய முன்வந்துள்ளார்கள். மருத்துவ செலவு சுமார் ருபாய் 7 லட்சம் ஆகும் என்றும் நமது ராஜ்புத் பொந்தில் சங்க உறவுகளிடம் இயன்ற உதவியை குடும்பத்தினர் கோரியுள்ளனர். அறுவை சிகிச்சை இந்த ஜூன் மாத இறுதியில் செய்ய மருத்துவர்கள் உத்தேசித்துள்ளனர்.

துத்திப்பட்டு ராஜ்புத் பொந்தில் சங்க தலைவர் திரு.G.பிரகாசம் சிங் அவர்கள் குடும்பத்தாரின் கோரிக்கைக்கு இணங்க, ஒறுங்கிணைந்த வேலூர் சங்கத்தின் வாயிலாக தலைமை சங்கத்திற்கு உதவிக் கடிதம் அனுப்பியுள்ளார். அதனை இத்துடன் இணைத்துள்ளேன்.

உயிர் காக்கும் இந்த உன்னத நோக்கத்திற்கு, நம் இரத்த சொந்தங்கள் தங்களால் இயன்ற பண உதவியை துத்திப்பட்டு ராஜ்புத் பொந்தில் கிளை சங்க தலைவர் திரு.G.பிரகாசம் சிங் அவர்களுக்கு நேரிடையாக அனுப்பியுதவும் படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம். அதன் நகலை தலைமை சங்கத்துக்கும் அனுப்பவும்.

வசூலாகும் பண விபரங்கள், பாதிக்கப் பட்ட குடும்பத்தாரிடம் வழங்கிய விபரங்கள் அனைத்தும், நம் சொந்த உறவுகள் அனைவருக்கும் முறைப்படி தெளிவாக தெரிவிக்கப் படும்.
நம் சொந்த உறவுக்கு இந்த இக்கட்டான சூழ்நிலையில் கை கொடுப்போம். இயன்ற உதவியை செய்வோம்.(பாதிக்கப்பட்ட துத்திப்பட்டு திரு. பாபு சிங் அவர்களின் கைபேசி எண்: 9944656284).

உதவி அனுப்ப வேண்டிய விபரம்:

Name : Mr.G.Pragasam (திரு.ஜி.பிரகாசம்)
Bank Name : SBI, Branch: Sulur
Account No: 52137612741
IFSC : SBIN0020403

இப்படிக்கு,
ஜெ.பிரகாஷ் சிங்
பொது செயலாளர்,
தமிழ் நாடு ராஜ்புத் பொந்தில் சங்கம்

TAMIL NADU RAJPUT BONDIL ASSOCIATION
Reg.No: 10/2019



**16.06.2021** வரை துத்திப்பட்டு ராஜ்புத் பொந்தில் கிளை சங்க உறுப்பினர் திரு.பாபு சிங் (s/L. முனி சிங்) அவர்களுக்கு மருத்துவ உதவி செய்தோரின் விபரம்:

| Sl.No | Name | Amount (Rs) |
|---|---|---|
| 1 | திரு.K.நாகேஸ்வர் சிங் ,தென் சென்னை மாவட்ட தலைவர் | **5000.00** |
| 2 | திரு.B.இந்தர் சிங், ஓசூர் தாலுகா தலைவர் | **5000.00** |
| 3 | திரு.B.கஜேந்திர சிங்,கிருஷ்ணகிரி மாவட்ட தலைவர் | **5000.00** |
| 4 | திரு.G.பவானி சிங்,மாநில தலைவர்,ஓசூர் | **5000.00** |
| 5 | திரு. J.பிரகாஷ் சிங்,மாநில பொது செயலாளர், சென்னை | **5000.00** |
| 6 | திரு.ரூப் சிங், விழுப்புரம் | **5000.00** |
| 7 | திரு.சசி கபூர் சிங், சென்னை | **1000.00** |
| 8 | திரு.N.மகேந்திரநாத் சிங்,,மாநில செயற்குழு உறுப்பினர், சென்னை | **3000.00** |
| 9 | திரு.C.சுதீர் சிங், சென்னை | **1000.00** |
| 10 | திரு.R.ஜெய்குமார் சிங், கோடம்பாக்கம், சென்னை | **5000.00** |
| 11 | திருமதி.சோபாராணி பாலாஜி சிங் - மாநில மகளிரணி தலைவி, சென்னை | **5000.00** |
| 12 | திரு.பீம் சிங், சென்னை | **1000.00** |
| 13 | திரு.K. யஷ்வந்த் சிங், தலைமை சங்க செயலாளர், பண்ருட்டி | **1000.00** |
| | இதுவரை கிடைத்த மொத்த உதவி தொகை | **47,000.00** |

உதவிகரம் நீட்டிய அனைவருக்கும் நன்றிகள். இயன்றவர்கள் முடிந்த உதவி செய்யவும்.

# தமிழ்நாடு ராஜ்புத் பொந்தில் சங்கம் கூட்டு பிரார்த்தனை




**பொருள்: நம் சமூக நலனுக்கான கூட்டு பிரார்த்தனை**

அன்பு சொந்தங்களே !

இந்த உலகில் நம்மையெல்லாம் சீரான பாதையில் வழி நடத்தி செல்வது நம்பிக்கை. நம் சக்திக்கு அப்பாற்பட்ட செயல்கள் நமக்கு நடக்கும் பொழுது அந்த செயல்களின் வலிமையை தாங்கி, "இதுவும் கடந்து போகும்" என்ற நம்பிக்கையில் தான் நம் வாழ்க்கை பயணம் ஓடி கொண்டு இருக்கிறது. அந்த கடந்து போகும் பாதையில், நாம் தனியாக செல்லாமல், நம்முடைய நன்மையை நாடும் நல் இதயங்கள், நல்லதே நடக்கும் என்ற நம்பிக்கையில் நம்முடன் இணைந்து கொண்டு பயணித்தால் அது பயன் கொடுக்கும்.

அதே நல்ல மனதோடு, நம் சமுதாய உறவுகள், அந்த கடினமான நம்பிக்கையை துருப்பு சீட்டாக வைத்து எதிர் கொள்ளும் பயணத்தில் தோள் கொடுக்க முன் வருவார்கள் என்ற நம்பிக்கையில் இந்த கூட்டு பிராத்தனை அறிவிப்பை முன் வைக்கிறோம்.

தமிழ் நாட்டில் மிகவும் சிறுபான்மையராக ராஜ்புத் பொந்தில் சமூகத்தினராக நாம் இருக்கிறோம். நம் சமுதாய வளற்ச்சிக்காக நம் தலைவர் Dr.G.பவானி சிங் ஜி அவர்கள் தலைமையில் ஒறுங்கிணைந்து போராடிக் கொண்டிருக்கும் இந்த வேளையில், கொரோனா என்ற உயிர் கொல்லி நோய் நாட்டில் பரவி, குடும்பங்களை சிதைத்து வேதனைகளை கொடுத்துக் கொண்டிருக்கிறது. நம் சமுதாய உறவுகள் பலரை இழந்து நாம் வாடிக் கொண்டிருக்கிறோம். அவ்வபோது துயர செய்திகள் வந்து நம் மன வலிமையை சோதித்துக் கொண்டிருக்கிறது.

இந்த நோயிலிருந்து விடுபடவும், நமக்கு மன நிம்மதியை பெறவும் , தன்னம்பிக்கையை வளர்க்கவும், கொரோனா நோய் விரைவில் அழிந்து அனைவரும் ஆரோக்கியமான வாழ்க்கை பாதையில் திரும்பவும், இறைவனிடம் அனைவரும் நல்லதே நடக்கும் என்ற நேற்மறை எண்ணங்களுடன் (positive thought) அவரவர் இல்லங்களில் இருந்து கூட்டாக இறைவனை பிரார்த்திப்போம்.

பிரார்தனை நாள்: 04.06.2021(வெள்ளிக் கிழமை)
பிரார்த்தனை நேரம் : காலை 10 மணி

பிரார்தனையின் போது அஹோபிலா க்ஷேத்திரத்தில், மக்களை அனைத்து நோய்களிலிருந்தும் காப்பாற்றுவதற்காக . ஸ்ரீ நரசிம்மருக்கு நடத்தப்பட்ட பூஜையில் சொல்லிய மந்திரத்தை வீட்டில் ஒலிக்க செய்வது பலன் தரும். இத்துடன் 7.54 நிமிட ஒலிப்பதிவை இணைத்துள்ளோம்.

# தமிழ்நாடு ராஜ்புத் பொந்தில் சங்கம்
# கூட்டு பிரார்த்தனை

நம் சமுதாய மக்களுக்காக, நாம் செய்கின்ற பிரார்த்தனைகளை நம் குழுக்களில் பகிர்வதன் மூலம் நம் உறவுகளிடையே ஒரு நம்பிக்கையையும், பிணைப்பையும் ஏற்படுத்த முடியும்.

இந்த முயற்ச்சி வெற்றி பெற உங்கள் அனைவருடைய ஆதரவையும், ஒத்துழைப்பையும் நாடுகிறோம்.

இந்த இக்கட்டான கால கட்டத்தில், கூட்டு பிரார்த்தனை செய்ய, தமிழ் நாடு ராஜ்புத் பொந்தில் சென்னை தெற்கு கிளை சங்கத்தின் சார்பாக ஆலோசனை வழங்கிய மாவட்ட செயலாளர் Dr.M.கோவர்தன சிங் அவர்களுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படிக்கு,

J.பிரகாஷ் சிங்
பொது செயலாளர்,
தமிழ் நாடு ராஜ்புத் பொந்தில் சங்கம்



## தமிழ் நாடு ராஜ்புத் பொந்தில் சங்கம்

Dt: 04.06.2021

**நம் சமூக உறுப்பினர்களின் தொலை நிலை கூட்டு பிரார்த்தனைக்கு நன்றி..நன்றி..நன்றி**

---

நம் தலைமை சங்கத்தின் வேண்டுகோளை ஏற்று, இன்று நம் சமுதாய உறவுகள் அவர்களுடைய இல்லங்களில் பூஜைகள் செய்தும், பிரார்த்தனைகள் செய்தும் நம் ராஜபுத்திர பொந்தில் சொந்த உறவுகள் கொரோனா நோய் மற்றும் இதர துன்பங்களிலிருந்து விடுபட்டு ஆரோக்கியமான மற்றும் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ மனமுருகி பிரார்தனை செய்து, நிகழ்வுகளை உறவுகளுடன் மகிழ்வுடன் பகிர்ந்துக் கொண்டார்கள். நம்முடைய இந்த கூட்டு பிரார்த்தனைக்கு, இறைவன் நிச்சயம் அருள் புரிவார், நல்ல பலன் கிடைக்கும் என நம்புவோமாக.

நமது சமுதாய உறவுகளை ஒறுங்கிணைத்து பலபடுத்தும், எதிர் கால நம்பிக்கை கொடுக்கும், மனதிற்கு அமைதியை அளிக்கும் ஒரு திருப்பு முனையாக அமைந்த இன்றைய தொலைநிலை கூட்டு பிரார்த்தனை நிகழ்வில் இணைந்த அனைத்து சொந்தங்களுக்கும், நம் சமூக காவலர், தலைவர் டாக்டர் G.பவானி சிங் ஜி அவர்கள் சார்பாகவும், என் சார்பாகவும், தலைமை சங்க அனைத்து நிர்வாகிகள் சார்பாகவும் நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

குழுக்களில் பகிராமல், தங்கள் வீடுகளில் பிரார்தனைகள் செய்த நல் உள்ளங்களுக்கும் நன்றிகள்.

வாழ்க ராஜபுத்திர பொந்தில் சங்கம் !
வளர்க நம் சமுதாய ஒற்றுமை !!

J.பிரகாஷ் சிங்
பொது செயலாளர்,
தமிழ் நாடு ராஜ்புத் பொந்தில் சங்கம்

# தமிழ்நாடு ராஜ்புத் பொந்தில் சங்கம்
# கூட்டு பிரார்த்தனை



# தமிழ்நாடு ராஜ்புத் பொந்தில் சங்கம்
# கூட்டு பிரார்த்தனை






















# தமிழ்நாடு ராஜ்புத் பொந்தில் சங்கம்
# கூட்டு பிரார்த்தனை



# தமிழ்நாடு ராஜ்புத் பொந்தில் சங்கம்
# கூட்டு பிரார்த்தனை
























# தமிழ்நாடு ராஜ்புத் பொந்தில் சங்கம் கூட்டு பிரார்த்தனை





















கூட்டு பிரார்தனையில் கலந்துக் கொண்ட அனைவருக்கும் நன்றிகள். எவருடையேதும் புகைப்படம் விடுப்பட்டிருந்தால் பொறுத்தருளவும்.

# TNRBA NEWS LETTER INGURATION FUNCTION
## மின் இதழ் வெளியீட்டு விழா (14.04.2021)




நமது ராஜ்புத் பொந்தில் சங்கத்திற்காக **"TNRBA NEWS LETTER** (செய்தி மடல்)" என்று பெயரிடபட்டுள்ள மும்மாதத்திற்கு ஒருமுறை வெளிவரும் மின் இதழ் வெளியீட்டு விழா 14.04.2021 அன்று புதன் கிழமை மாலை 6 மணியளவில், நம் சமூக தலைவர் டாக்டர். G.பவானி சிங் ஜி அவர்களின் நல்லாசியுடன், திருவள்ளூர் மாவட்ட தமிழ்நாடு ராஜ்புத் பொந்தில் கிளை சங்கத்தின் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் வெளியிடப்பட்டது என்பதனை மகிழ்ச்சியுடனும், பெருமையுடனும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மின் இதழ் வெளியீட்டு விழாவுக்கு மாநில உப தலைவர் திரு.S.இந்தர் சிங் ஜி Ex.M.C அவர்கள் தலைமை ஏற்றார்கள். மாநில உப தலைவர் திரு.விஜயகுமார் சிங் ஜி அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.



மாநில உதவி செயலாளர், திருவள்ளூர் மாவட்ட தலைவர் திரு.E.ராஜேந்தர் சிங் ஜி விழாவை வழி நடத்தினார்கள். வட சென்னை மாவட்ட உதவி செயலாளர், மின் இதழ் ஆசிரியர் குழு உறுப்பினர் திரு.B.K.பாலாஜி சிங் ஜி இறை வணக்கத்துடன் வரவேற்புறை நிகழ்த்தினார்கள்.

மாநில பொது செயலாளர் திரு.J.பிரகாஷ் சிங் ஜி அவர்கள் மின் இதழ் துவக்கியதற்கான நோக்கம், சிறப்பு அம்சங்கள், எதிர்கால திட்டங்கள், சங்க ஒற்றுமையின் அவசியம் பற்றி விளக்கி, வெற்றி பயணத்தை தொடர ஆக்கபூர்வமான ஆலோசனைகள் மற்றும் ஒத்துழைப்புகளை அனைவரிடமிருந்தும் வேண்டினார்கள். முதல் இதழ் என்பதால் விபரங்கள் விடுபடுதல் போன்ற தவறுகள் இருந்தால் அதனை குறையாக எடுத்துக் கொள்ளாமல், வரும் இதழ்களில் அதனை தவிற்கும் விதமாக சமுதாய நிகழ்வுகளை மாவட்ட நிர்வாகிகள் மூலம் உரிய நேரத்தில் அனுப்பியுதவ கேட்டுக் கொண்டார்.

மாநில மகளிரணி தலைவி திருமதி. சோபாராணி பாலாஜிசிங், தலைமை நிலைய செயலாளர் திரு.யஷ்வந்த் சிங் ஜி, தென் சென்னை மாவட்ட செயலாளர் டாக்டர். M.கோவர்தன சிங் ஜி, தென் சென்னை புறநகர் செயலாளர் திரு. T.ரமேஷ் சிங் ஜி, தென் சென்னை புறநகர் மாவட்ட உப தலைவர் , மின் இதழ் ஆசிரியர் குழு உறுப்பினர் திரு.K.ரவிசந்தர் சிங் ஜி, தென் சென்னை மாவட்ட உதவி செயலாளர் திரு.G.பாலாஜி சிங் ஜி, திருவள்ளூர் மாவட்ட செயலாளர் திரு.E.ஹரி சிங் ஜி, ஆலவயல் அறக்கட்டளை நிர்வாகி திரு.சசி கபூர் சிங் ஜி ஆகியோர்கள் ஆக்கபூர்வமான கருத்துரைகள் வழங்கி, மின் இதழ்

# TNRBA NEWS LETTER INGURATION FUNCTION
## மின் இதழ் வெளியீட்டு விழா (14.04.2021)

துவக்கத்துக்கு மகிழ்ச்சிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்தார்கள்.

மாநில உப தலைவர் திரு.விஜயகுமார் சிங் அவர்கள்,தனது உரையில் 45 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த சங்கம் செய்யாத பணிகளை கடந்த 4 ஆண்டுகளில் நம் தலைவர் Dr.G.பவானி சிங் ஜி தலைமையிலுள்ள சங்கம் செய்து சாதித்துள்ளது என்று குறிப்பிட்டார். மற்றும் கடந்த ஒரு வருட சங்க பணியில் திரு.J.பிரகாஷ் சிங் அவர்கள் தொழில் நுட்பங்களை புகுத்தி சங்க செயல் பாடுகளில் பெரிய மாற்றங்களை கொண்டு வந்துள்ளார் என தெரிவித்தார் மாநில உப தலைவர் திரு.S.இந்தர் சிங் ஜி அவர்கள் சிறப்புரையில், மின் இதழ் வெளியீட்டின் மூலம் ஒரு நீண்ட நாள் சங்க கனவு நிறைவேறியதாக கூறினார்கள். சங்கம் கடந்து வந்த சோதனைகள், நம் தலைவர் டாக்டர். G.பவானி சிங் ஜி தலைமையின் செயல்பாடுகள், அடைந்துள்ள முன்னேற்றம், ஒற்றுமையின் அவசியத்தையும் விளக்கினார்கள். மற்றும் பொது செயலாளர் திரு.J.பிரகாஷ் சிங் ஜி அவர்களின் அர்ப்பணிப்பு, ஆக்கபூர்வமான சிந்தனைகள், அவற்றை குறித்த காலகட்டத்தில் செய்து முடிக்க திட்டமிடுதல், செயல் படுத்தல் ஆகியவற்றை வெகுவாக பாராட்டி, அனைவரும் அவருக்கு ஒத்துழைப்பை நல்கும் படி கேட்டுக் கொண்டார்.




மாநில செயற்குழு உறுப்பினர், தென் சென்னை மாவட்ட பொருளாலர் திரு.N.மகேந்திரநாத் சிங் ஜி நன்றியுரை கூறினார்கள்.

திருவள்ளூர் மாவட்ட தலைவர், விழா ஒறுங்கிணைப்பாளர், மாநில உதவி செயலாளர் திரு.E.ராஜேந்திர் சிங் ஜி அனைத்து சிறப்பு அழைப்பாளர்களுக்கும், பொன்னாடை போர்த்தி கொளரவித்தார்கள். கூட்ட முடிவில் அனைவருக்கும் இரவு உணவு அளித்து உபசரிக்கப்பட்டது. கூட்டம் மன நிறைவுடனும், நேர்மறை ஆற்றலுடனும் (positive energy) முடிவடைந்தது.




மின் இதழ் வெளியீட்டு விழாவை நடத்தும் பொறுப்பை முன்வந்து ஏற்று, சிறு பிசுகும் இல்லாமல் தன் இல்லத்திலேயே நடத்தி சொந்தங்கள் அனைவரையும் அன்பு உபசரிப்பில் மகிழ வைத்த திரு.E.ராஜேந்திர சிங்கை தலைமை சங்கம் வாழ்த்தி பெருமை கொள்கிறது.

J.பிரகாஷ் சிங்

பொது செயலாளர்
தமிழ் நாடு ராஜ்புத் பொந்தில் சங்கம்,.
இயக்குனர் –**TNRBA** வலைத்தளம் மற்றும் செய்திமடல்



# ராஜா தேசிங்கின் 328 வது பிறந்த நாள் விழா

அன்புடையீர்,

அனைவருக்கும் செஞ்சி ராஜா தேசிங் அவர்களின் 328 வது பிறந்த நாள் வாழ்த்துக்கள்.

நம்முடைய வம்சத்தின் குல விளக்கு. செஞ்சியை ஆண்ட மாவீரன் ராஜா தேசிங் அவர்களின் பிறந்த நாள் விழா காணும் இந்த நாளில், கொரோனாவின் இரண்டாவது அலையின் தாக்கம் காரணமாக இளைஞர் அணியின் சார்பாக மாநில அளவில் வெகு விமர்சையாக நடைபெறுவதாக இருந்த ராஜா தேசிங் பிறந்த நாள் விழா செஞ்சியில் திட்டமிட்ட படி சிறப்பாக கொண்டாட இயலவில்லை.

அதே சமயம், செஞ்சிக்கு அருகாமையில் உள்ள கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த, நம் சங்கநிர்வாகிகள் மற்றும் சொந்தங்கள் கடலியிலுள்ள ராஜா தேசிங் நினைவிடம் சென்று, மாநில அரசின் வழிகாட்டுதலின் படி முக கவசம் அணிந்தும், சமூக இடைவெளியை கடைபிடித்தும், ராஜா தேசிங்கிற்கு மரியாதை செலுத்த ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

பிற மாவட்டங்களிலிருந்து பெரும் திரளாக வந்து, உற்சாகமாக கலந்து கொள்ளும் சொந்தங்களின் வழக்கமான நிகழ்வு இந்தமுறை கொரோனவின் காரணங்களால் தவிர்க்கப் படுகிறது.

நம்முடைய சமுதாய மக்கள் அனைவரும் அவர் அவர் இல்லங்களில், ராஜா தேசிங் திருவுருப் படத்திற்கு மலர்மாலை சூட்ட வேண்டும் என்று அன்புடன் கேட்டு கொள்கிறேன்.

மிகவும் உற்சாகத்துடன், ஆன் லைன் வாயிலாக பேச்சுப் போட்டி மற்றும் கட்டுரை போட்டியில் கலந்துக் கொண்ட நம் மாணவ, மாணவி செல்வங்களுக்கு, அதற்கான சான்றிதழ்கள் அவர்கள் முகவரிக்கே அனுப்பி வைக்கப்படும் என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

விழாவை சிறப்பாக கொண்டாட முயற்சிகள் எடுத்தமைக்கும், செயல் திட்டங்களை வகுத்தமைக்கும் தமிழ் நாடு ராஜ்புத் சங்க இளைஞர் அணியினருக்கு நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இனிய நன்னாளில் நமது சமுதாயத்தில் உள்ள அனைத்து சகோதரர்கள், சகோதரிகள் அனைவரும். ஒற்றுமையுடன் ஒருங்கிணைந்து சமுதாய பணிகளை தொடர்ந்து பணியாற்றிட வேண்டும் என்றும். நம்முடைய கனவுகள் நனவாக பாடு பட வேண்டும் என்றும் பணிவோடு கேட்டு கொள்கிறேன்.

ராஜா தேசிங் பிறந்தநாள் சிறப்பிதழை வெளியிட முயற்சிகள் மேற்கொண்ட மின் இதழ் குழுவுக்கு நன்றியினையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.


ஒன்று படுவோம்! வெற்றி பெறுவோம்!!

வாழ்க ராஜா தேசிங் !

வளர்க ராஜா தேசிங்புகழ்!!

இப்படிக்கு,
டாக்டர் G..பவானி சிங்
தலைவர் – தமிழ் நாடு ராஜ்புத் பொந்தில் சங்கம்.
27.04.2021

# ராஜா தேசிங்கின் 328 வது பிறந்தநாள் விழா




*ராஜா தேசிங் பிறந்தநாள் சிறப்பிதழ்*

## ஒரு சிறு நெருடல்....

தமிழ் நாட்டில், ராஜ்புத் பொந்திலாகிய நாம் சிறுபான்மையராக வாழ்கிறோம். நம் இருப்பை நாமும் சரியாக தெரிந்துக் கொண்டு, அரசாங்கத்துக்கும் உரிய முறையில் தெரிய படுத்தி வருகிறோம். இது நமது சமுதாய சந்ததியரின் எதிர்காலம் மற்றும் வளர்ச்சி பற்றியது.

அன்னாருடைய பிறந்த தினத்தில் நாம் இன்னும் அதிக எண்ணிக்கையில் சமூக ஊடகங்களின் வாயிலாக மரியாதை செலுத்தியிருக்கலாம் என்று தோன்றுகிறது.

பல பொழுது போக்கு அம்சங்களை பற்றி குழுவில் விவாதிக்கிறோம். நாம் முன்னிலை படுத்தும் நம் முன்னோரை நாம் சரியான முறையில் கண்டுக் கொள்ளவில்லை எனில் அரசாங்கம் எப்படி கண்டுக் கொள்ளும்,சற்று சிந்தியுங்கள்.

எனவே வருங் காலங்களிலாவது நமது சமுதாய உணர்வுகளை சரியான முறையில் வெளிபடுத்தி, நம் குறிக்கோள் மற்றும் இலக்கை அடைய உறுதிக் கொள்வோம்.

நன்றி.

J.பிரகாஷ் சிங்

பொது செயலாளர்
தமிழ் நாடு ராஜ்புத் பொந்தில் சங்கம்,.
இயக்குனர் –TNRBA வலைத்தளம்
மற்றும் செய்திமடல்



# ராஜா தேசிங்கின் 328 வது பிறந்த நாள் விழா

## மாணவ, மாணவிகளுக்கு, இளைஞர் அணி சார்பில் பரிசு வழங்கும் நிகழ்ச்சி

TNRBA இளைஞர் அணி சார்பில் ராஜா தேசிங்கின் 328 வது பிறந்த நாளையொட்டி ஆன் லைன் வாயிலாக நம் சமுதாய மாணவ, மாணவியருக்கு, பேச்சுப் போட்டி, கட்டுரை போட்டி நடத்தப் பட்டது. பரிசு வழங்கும் நிகழ்ச்சி 05.05.2021 அன்று திருச்சி மாவட்டத்திலிருந்து துவக்கப்பட்டது. ஊக்கப் படுத்தும் விதமாக,கலந்துக் கொண்ட அனைவருக்கும் பரிசுகள் அந்தந்த மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் சார்பாக வழங்கப்பட்டது.





திருச்சி மாவட்ட பரிசுகளை மாவட்ட தலைவர். திரு.ஜெயராம் சிங் அவர்கள் வழங்கினார்கள்.





மணப்பாறை வட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.S..ரகுநாத் சிங், செல்வி Y.நேஹா சிங்குக்கு பரிசு வழங்கினார்



செல்வன் சுபாஷ், சங்கராபுரம் திரு.சந்தாராம் சிங்கிடமிருந்து பரிசு பெறுகிறார்

# ராஜா தேசிங்கின் 328 வது பிறந்த நாள் விழா

## மாணவ, மாணவிகளுக்கு, இளைஞர் அணி சார்பில் பரிசு வழங்கும் நிகழ்ச்சி





செல்வன் ஹரிதர்ஷன் சங்கராபுரம் திரு.சந்தாராம் சிங்கிடமிருந்து பரிசு பெறுகிறார்





கடலூர் மாவட்ட பரிசுகள் திரு.ரவிசங்கர் முன்னிலையில் வழங்கப்பட்டது.





மன்னார்குடி, V.கஸ்தூரி பாய்
D/O. M..விஜேந்தர் சிங், திருவாரூர்.திரு கணேஷ் சிங்கிடமிருந்து பரிசு.பெற்றார்

# ராஜா தேசிங்கின் 328 வது பிறந்த நாள் விழா

## மாணவ, மாணவிகளுக்கு, இளைஞர் அணி சார்பில் பரிசு வழங்கும் நிகழ்ச்சி



விழுப்புரம் மாவட்ட பரிசுகளை திரு.S.ராஜேஷ் வழங்கினார்.



கீர்த்திகா பாய், சந்தியா பாய், ஹரிணி பாய் ஆகியோருக்கு வாணியம்பாடி TNRBA நிர்வாகிகள் திரு. ரவி சிங், திரு.அசோக் சிங், ஆகியோர் பரிசுகளை வழங்கினர்.







# ராஜா தேசிங்கின் 328 வது பிறந்த நாள் விழா

## மாணவ, மாணவிகளுக்கு, இளைஞர் அணி சார்பில் பரிசு வழங்கும் நிகழ்ச்சி



டாக்டர் ஜி.பவானி சிங் ஜி, ஓசூர் எஸ்.எல்.தருன் குமாருக்கு பரிசு வழங்கினார்



செல்வி A. ஜானு, கோவை மாவட்ட தலைவர் திரு.V.சுரேஷ் பாபு சிங் அவர்களிடமிருந்து பரிசு பெறுகிறார்.

மாநில தலைவர். டாக்டர். G.பவானி சிங் அவர்கள் மற்றும் மாநில பொதுச் செயலாளர் திரு.J.பிரகாஷ் சிங் அவர்கள் கொடுத்த தன்னம்பிக்கையும், உறுதுணையுமே நம் இளைஞரணிக்கு மூலதனம்.அதற்காக அவர்களுக்கு எங்கள் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

இனிவரும் காலங்களில் அனைத்து மாவட்ட இளைஞரணி சார்பிலும் அதிக அளவில் குழந்தைகள் பங்கு பெற வேண்டும் என்பதே எங்கள் விருப்பம்.

ஒத்துழைப்பு தந்த தலைமைச் சங்க நிர்வாகிகள், மகளிரணி நிர்வாகிகள், இளைஞரணி நிர்வாகிகள் மற்றும் குறிப்பாக நம் ராஜ்புத் பொந்தில் சங்க சட்ட ஆலோசகர் திரு. யஷ்வந்த் சிங், கடலூர் இளைஞரணி திரு.ராஜேஷ் சிங், சங்கராபுரம் திரு. லோக்மான் சிங், வாணியம்பாடி திரு. பாலாஜி சிங், மணப்பாறை திரு.யோகேஷ் சிங், ஓசூர் திரு. பிரவீன் சிங் அனைவருக்கும் நன்றி.

பரிசுகளை ஸ்பான்சர் செய்த திரு. R.ஹரி கணேஷ் அவர்களுக்கும் நன்றி.

R.கார்த்திக் சிங்
M.Sc., M.Phil., MBA., B.Ed., MA., PGDCA, ADH.,PG ASST. (MATHEMATICS).
மாநில இளைஞர் அணி செயலாளர்,
தமிழ் நாடு ராஜ்புத் பொந்தில் சங்கம்.

தமிழ் நாடு ராஜ்புத் பொந்தில் தலைமை சங்கம் இளைஞர் அணிக்கு வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொள்கிறது 🙏



# சர்வதேச சுற்றுலா தளமாகும் செஞ்சி கோட்டை...

செஞ்சி கோட்டையில் சுற்றுலா மற்றும் தொல்லியல் துறை மூலம் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து விழுப்புரம் மாவட்ட கலெக்டர் 27.06.2021 அன்று ஆய்வு செய்தார்.

செஞ்சி கோட்டை கல்யாண மகால், படை வீரர்கள் பயிற்சி மையம், யானைக்குளம், தர்பார், போர்வீரர்கள் குடியிருப்பு மற்றும் புதிதாக கட்டி வரும் டிக்கெட் கவுண்டர் ஆகியவற்றை பார்வையிட்ட பின் நிருபர்களிடம் கூறியதாவது:

“தமிழக சுற்றுலா துறை, இந்திய தொல்லியல் துறை இணைந்து சர்வதேச சுற்றுலாதளத்திற்கு ஏற்ப கட்டமைப்புகளை ஏற்படுத்த திட்டமிடபட்டுள்ளது. இதற்காக செயல்படுத்த படவேண்டிய திட்டங்கள் குறித்து ஆய்வு செய்தோம். இந்திய தொல்துறை மூலம் 9 கோடி ருபாய் மதிப்பில் பணிகள் நடக்கிறது. இதில் 1 கோடி ருபாய் மதிப்பில் ராஜகிரி கோட்டையின் தரைபகுதிகளில் பூங்கா, இயற்கை சீற்றங்களில் இருந்து பாதுகாக்க கல்யாண மகாலில் ரசாயண பூச்சு செய்யபட உள்ளது.

டிக்கெட் கவுண்டர் அருகிலிருந்து உள்ளே வந்து செல்ல தனியார் நிறுவனங்களின் உதவியுடன் பேட்டரி கார் வசதி செய்யபடும். கைடுகள் நியமிக்கவும் ஆலோசனை உள்ளது.

புதுச்சேரி, திருவண்ணாமலைக்கு வரும் சுற்றுலா பயணிகளை செஞ்சி கோட்டைக்கு வரவழைக்கும் வகையில் சர்வதேச சுற்றுலா தலத்திற்கு ஏற்ப கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படும்”.

இவ்வாறு கலெக்டர் மோகன் கூறினார்.

மாவட்ட உதவி இயக்குனர் ஊராட்சிகள் ஜோதி, மாவட்ட சுற்றுலா அலுவலர் அபராஜிதன், செஞ்சி கோட்டை பராவ்மரிப்பு அலுவலர் ஈஸ்வரன்,மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் சரவணன், தாசில்தார் ராஜன், பி.டி.ஒ.க்கள் கேசவலு,சுப்பிரமணியன், டி.எஸ்.பி இளங்கோவன் உடனிருந்தனர்.

*****


சர்வதேச சுற்றுலா தலத்திற்கு ஏற்ப கட்டமைப்புகள்
செஞ்சி கோட்டையில் ஆய்வுக்குப்பின் கலெக்டர் தகவல்

செஞ்சி கோட்டை பற்றிய செய்தி..
27.06.2021 நாளிதழில்

**Shared by: Shri.M.Anbarasu Singh,**
**State Executive Committee Member**

# ராணி பேட்டை ராணி பாய் மண்டபம் பற்றிய 25.06.2021 தினகரன் நாளிதழில் வெளி வந்த செய்தி உங்கள் பார்வைக்கு....

### ராணிப்பேட்டையின் வரலாற்று சின்னமாக திகழும்

## ராஜா தேசிங்கு, ராணிபாயின் நினைவு தூண்கள் சீரமைக்கப்படுமா?

**மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ள எதிர்பார்ப்பு**

ராணிப்பேட்டை, ஜூன் 25: ராணிப்பேட்டையின் வரலாற்று சின்னமாக திகழும் ராஜா தேசிங்கு மற்றும் ராணிபாயின் நினைவு தூண்களை மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டு சீரமைக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் மற்றும் பொது மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

ராணிப்பேட்டையில் 3 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். இங்கு மிகப்பெரிய நிறுவனமான பெல் நிறுவனம், 3 சிப்காட் பகுதிகள் உள்ளன. மேலும் இங்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட தோல் தொழில் ரசாயனம், இரும்பு, பிளாஸ்டிக் தொழிற்சாலைகள் உள்ளன. கடந்த 2020ம் ஆண்டு ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத்தில் இருந்து ராணிப்பேட்டை மாவட்டம் உருவாக்கப்பட்டது.

இந்தராணிப்பேட்டை மாவட்டத்திற்கு தனி வரலாற்று சிறப்பு உண்டு. அதில் கடந்த 1714ம் ஆண்டு ஆற்காடு நவாபாக இருந்த சாதத்துல்லா கான், 30-10-1714ம் ஆண்டு செஞ்சி மீது போர் தொடுத்ததில் ராஜா தேசிங்கை வீழ்த்தி செஞ்சியை கைப்பற்றினார். ராஜா தேசிங்கு மரணமடைந்த செய்தியை அறிந்த அவரது மனைவி ராணிபாய் உடன்கட்டை ஏறி தன் உயிரை நீத்தார். இவர்களின் ஒற்றுமையை அறிந்த ஆற்காடு நவாப் சதாத்துல்லா கான், அவர்களின் நினைவாக பாலாற்றங்கரையோரம் பளிங்கு பச்சை கற்களால் ஆன இரு நினைவு சின்னங்களை அமைத்தார்.



ராணிப்பேட்டை பாலாற்றங்கரையோரம் பாழடைந்து காணப்படும் ராஜா தேசிங்கு மற்றும் ராணிபாய் நினைவு தூண்.

மேலும், ராணிபாய் நினைவாக ராணிப்பேட்டை என பெயர் வந்ததாகவும் கூறப்படுகிறது. மேலும், ஆற்காடு நவாப் சாதத்துல்லா கான், 10 ஆண்டுகள் கழித்து 1724ம் ஆண்டு மரணமடைந்தார். அவரது நினைவாக ஆற்காடு பாலாற்றங்கரையில் பளிங்கு பச்சைக்கற்களால் உருவான நினைவு சின்னம் அமைக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து ஆங்கிலேயர் ஆட்சிகாலத்தில், ராணிப்பேட்டை நகரத்தில் பெரிய குதிரைப்படை இங்குதான் நிலை நிறுத்தப்பட்டிருந்தது. அந்த இடத்தின் அருகே ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டப்பட்டது. தற்போது சென்னை-மும்பை தேசிய நெடுஞ்சாலை ஓரம் உள்ள அரசினர் சிறுவர் காப்பகம், இருக்கும் இடத்தில் ஆங்கிலேயர்களின் வெடிமருந்து கிடங்காக இயங்கி வந்துள்ளது.

மேலும் ராணிப்பேட்டையில் உள்ள வார சந்தையில், இரும்பு வேலி அமைக்கப்பட்டு அதில் போர்களில் பிடிக்கப்பட்ட பிணை கைதிகளுக்கு திறந்த வெளிச்சிறையாக செயல்பட்டு வந்ததாக கூறப்படுகிறது. முதல் மற்றும் இரண்டாம் உலகப்போரில் சென்னை மற்றும் பெங்களூரில் இருந்து வரும் ராணுவத்தினருக்கு உதவியாக மிகப்பெரிய ராணுவ தளம் இங்கு நிலை நிறுத்தப்பட்டிருந்தது. இவ்வளவு சிறப்பு வாய்ந்த இந்த ராணிப்பேட்டையில் ராஜா தேசிங்கு மற்றும் ராணிபாயின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுச்சின்னங்கள் தற்போது பாழடைந்து புதர் மண்டியும், சமூகவிரோத செயல்களும், குடி மகன்களின் கூடாரமாகவும் செயல்பட்டு வருகிறது.

இதுகுறித்து அப்பகுதியினர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்தும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லையாம்.

மேலும், ராணிப்பேட்டை மாவட்டமாக உதயமாகி ஒன்றரை ஆண்டுகள் ஆகியுள்ள நிலையில், மாவட்ட கலெக்டர் நடவடிக்கை மேற்கொண்டு ராஜா தேசிங்கு மற்றும் ராணிபாயின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவு தூணை சீரமைத்து சுற்றுலாத்தலமாக அமைக்கவும். அப்பகுதியில் பூங்கா அமைத்து காலை மற்றும் மாலை நேரங்களில் பொதுமக்கள் நடைபயிற்சி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

பகிர்ந்தவர்:

**R.வசந்தி பாய் ரவீந்தர்நாத் சிங்**

மாநில மகளிர் அணி துணை தலைவி

ராணிபேட்டை.



# நமது சமூக சாதனை பெண்மணிகள்

## திருமதி. தாரணி பிரபு சிங், திருச்சி.

1

நான் தாரணி பிரபு சிங். விழுப்புரத்தில் பிறந்து, வளர்ந்தேன். என் தாய் தந்தையர் பெயர் திருமதி.புவனேஸ்வரி பாய் மற்றும் திரு. அசோக் சிங். என் மூத்த சகோதரியின் பெயர் திருமதி. அர்ச்சனா பாய்.

பல் வேறு வாழ்க்கை போராட்டத்திற்கிடையே நான் என் பிபிஏ (BBA) மற்றும் எம்பிஏ (MBA) படிப்பை படித்து முடித்தேன்.

என் அப்பா எங்களை தைரியமாகவும் நல்ல வழியிலும் வளர்த்தார். எனவே நான் சுயாதீனமாக இருக்க வேண்டும், என் பெற்றோருக்கு உதவ வேண்டும் என எண்ணி வேலைக்கு முயற்ச்சி செய்து, உதவி பேராசிரியராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன்.

நான் 3 ஆண்டுகள் கடுமையாக உழைத்தேன், பெற்றோருக்கு உதவியாக இருந்தேன், என் தேவைகளையும் பார்த்துக் கொண்டேன். என் எண்ணங்கள் எல்லாம் மேன்மேலும் கடினமாக உழைத்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்பதே..



பெற்றோர்கள் அவர்கள் கடமையாக எனக்கு திருமணம் செய்து வைத்தார்கள். எனது கணவர் பெயர் திரு.பிரபு சிங் (s / o பாபுசிங், திருச்சி).என் திருமணத்திற்கு பின்பும் நான் என் இலக்கை அடைய பயணித்துக் கொண்டிருந்தேன். இதற்கிடையில் நான் தாய்மை அடைந்தேன்... அதில் எனக்கு மிக மகிழ்ச்சியே ஏனெனில் தாய் மிகவும் பொறுப்பான ஸ்தானம். நான் ஒரு பெண் குழந்தை ஈன்றெடுத்தேன். அவளுடைய பெயர் திக்ஷிதா.



நானும் அவளும் அதிக சமயம் ஒன்றாக செலவிடுகிறோம்..நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன். நானும் என் குழந்தையும் அதிக நேரம் செலவிட்ட பிறகு நான் அவளை தனித்துவமாக வளர்க்க விரும்புகிறேன், அதனால் நான் அதிக அக்கறை எடுத்து மேலும் கற்பிக்கிறேன். பயனாக அவள் தானாக படிக்க ஆரம்பித்தாள்.. சிலர்...நீங்கள் குழந்தையை எவ்வளவு நன்றாக வளர்கிறீர்கள் என்று சொன்னார்கள் ..



# நமது சமூக சாதனை பெண்மணிகள்

## திருமதி. தாரணி பிரபு சிங், திருச்சி.

1

அதனை கேட்கும் போது, நான் மிகவும் மகிழ்ச்சியை உணர்கிறேன் .. நான் அவளை தற்போது எல்.கே.ஜி (LKG) ல் சேர்த்துள்ளேன்..

மேலும் நான் ஒரு சாதாரண அம்மாவாக இருக்ககூடாது, ஒரு சாதனை தாயாக இருக்க வேண்டுமென்று நினைக்கிறேன்.. எனது கணவரின் ஆதரவுடனும், ஊக்கத்துடனும் மீண்டும் வேலை தேட ஆரம்பித்தேன். ஆசிரியர் வேலைக்கான நேர்காணலில் 20 ல் ஒருவராக தேர்ந்தெடுக்கப்பட்டு,இப்போது நைனா முகமது கல்லூரியில் உதவி பேராசிரியராக பணிபுரிகிறேன்.

என் இலக்கை நான் இன்னும் முழுமையாக அடைய வில்லை. பி.எச்.டி (PhD) படிப்புக்கு தேர்வாகியுள்ளேன். கொரோனா பரவல் காரணமாக படிப்பு துவங்கவில்லை. வாழ்க்கையில் உயரிய இடத்தை அடையும் வரை ஓடிக் கொண்டிருப்பேன், என் பயணம் தொடரும்...

அது தவிர எனக்கு மணமகள் அலங்கார கலையில் மிகுந்த ஆர்வம் உண்டு. பலவிதமான வாகனங்களை ஓட்டுவதில் விருப்பம்...மேலும் புகைப்படம் எடுப்பதில் அலாதி பிரியமும் உண்டு.. அவ்வளவுதான் தற்போது சொல்வதற்கு ..

திருமதி. தாரணி பிரபு சிங், B.B.A; M.B.A, திருச்சி.

**CONGRATULATIONS & BEST WISHES TO MRS. THARANI PRABHU SINGH**
**TNRBA & NEWS LETTER TEAM**





**BEST WISHES**
**FROM**
**TAMIL NADU RAJPUT**
**BONDIL ASSOCIATION**





# பிறரை மகிழ வைத்து மகிழுங்கள்

**Dr.G.Bhavani Singh**

***'பிறரை மகிழ வைத்து மகிழுங்கள்*...**

வாழ்க்கை பற்றிய புதிர்கள் ஏராளமாக உள்ளன. அதில் ஒன்று மகிழ்ச்சியைத் தேடி மனிதனின் நீண்ட போராட்டம்...

ஏழை, பணக்காரன், அதிகாரம் படைத்தவர், பாமரன்,அறிவாளி என எத்தனை விதமானவர்களை அழைத்து வந்தாலும், அவர்களுக்குள் எவ்வளவு வேறுபாடுகள் இருப்பினும், மகிழ்ச்சியை அவர்கள் தேடி அலைவது மட்டும் ஒரே பொதுக்காரணியாக இருந்து வருகிறது...

*வாழ்க்கையின் அழகு என்பது நீங்கள் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள் என்பதில் இல்லை. உங்களால் அடுத்தவர் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்தார்கள் என்பதிலேதான் இருக்கிறது...*

மகிழ்ச்சி என்பது போய் சேரும் இடம் அல்ல. அது ஒரு பயணம்...

மகிழ்ச்சி என்பது எதிர்காலம் இல்லை. அது நிகழ்காலம்...

மகிழ்ச்சி என்பது ஏற்றுக் கொள்வது அல்ல. அது ஒரு முடிவு...

ஒரு அழகான பெரிய பணக்காரி அதிக மதிப்புள்ள உடை உடுத்தி ஆடம்பரத்தில் வாழும் ஒரு பெண். ஒரு மனநல மருத்துவரிடம் சென்றாள்... அவரிடம் "என் வாழ்வு ஒரே வெற்றிடமாக இருக்கிறது. எவ்வளவு இருந்தும் வெற்றிடமாகவே உணருகின்றேன்...

பொருள், இலக்கு என்றில்லாமல் வாழ்க்கை போய்க் கொண்டு இருக்கிறது. என்னிடம் அளவு கடந்த பணமும், சொத்தும் எல்லாம் இருக்கிறது. இல்லாதது அமைதியும், மகிழ்ச்சியும் மட்டுமே. என் மகிழ்ச்சிக்கு ஏதாவது வழி சொல்லுங்கள் என்றாள்...

"மருத்துவர் அவரின் அலுவலகத்தில் தரையை கூட்டிக் கொண்டிருந்த ஒரு பணிப்பெண்ணை அழைத்தார்...

அந்த பணக்காரப் பெண்ணிடம், " நான் இப்பொழுது பணிப்பெண்ணிடம் எப்படி மகிழ்ச்சியை வரவழைப்பது" என்று சொல்லச் சொல்கிறேன். நீங்கள் குறுக்கே எதுவும் பேசாமல் அவர் பேசுவதை மட்டும் கேளுங்கள் என்றார்...

பணிப்பெண்ணும் துடைப்பத்தை கீழே போட்டு விட்டு ஒரு நாற்காலியில் அமர்ந்து சொல்லத் தொடங்கினாள்...

"என் கணவர் இறந்த மூன்றாவது மாதம், என் ஒரே மகன் விபத்தில் இறந்து போனார். எனக்கு யாரும் இல்லை எதுவும் இல்லை. என்னால் உறங்க இயலவில்லை. உண்ண முடியவில்லை. யாரிடமும் சிரிக்க

Contd...

## பிறரை மகிழ வைத்து மகிழுங்கள்........

முடிய வில்லை. என் வாழ்க்கையை முடித்துக் கொள்ளலாம் என நினைத்தேன்... இப்படி இருக்கையில் ஒருநாள் நான் வேலை முடிந்து வரும்போது ஒரு பூனை என்னை பின் தொடர்ந்தது...

*வெளியே மழை பெய்து கொண்டு இருந்தது. எனக்கு பூனையை பார்க்க பரிதாபமாக இருந்தது. அதை நான் என் வீட்டில் உள்ளே வரச் செய்தேன்...

நான் அதற்கு குடிக்க கொஞ்சம் பால் கொடுத்தேன். அது அத்தனை பாலையும் குடித்து விட்டு என் கால்களை அழகாக வருடி கொடுத்தது...

கடந்து போன மூன்று மாதத்தில் நான் முதல் முதலாகப் புன்னகைத்தேன். நான் அப்பொழுது என்னையே கேள்வி கேட்டேன். ஒரு சிறு பூனைக்கு நான் செய்த ஒரு செயல் என்னை மகிழ்ச்சி அடையச் செய்கிறது எனில்!, ஏன் இதை பலருக்கு செய்து நான் ஏன் மன நிலையை மாற்றி கொள்ளக் கூடாது என ஆலோசித்தேன்...

அடுத்த நாள் நோய் வாய்ப்பட்டிருந்த என் அடுத்த வீட்டு நபருக்கு உண்பதற்கு கஞ்சி கொடுத்தேன். அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அவரை மகிழ வைத்து நான் மகிழ்ந்தேன்...

இப்படி ஒவ்வொரு நாளும் நான் பலருக்கு உதவி, அவர் தம் மகிழ, நானும் பெரு மகிழ்வுற்றேன்...

இன்று என்னை விட மன நிறைவாக உறங்கவும், உணவை உண்ணவும் யாரேனும் இருக்கிறார்களா?..என்பதே அய்யப்பாடுதான்...

மகிழ்ச்சி என்பது, அதை மற்றவர்க்கு கொடுப்பதில் தான் இருக்கிறது என்பதை இந்த செயல்கள் மூலமாக கண்டு கொண்டேன்...!

இதைக் கேட்ட அந்தப் பணக்காரப் பெண் ஓலமிட்டு அழுதாள். அவளிடம் பணத்தை கொண்டு வாங்கக் கூடிய எல்லாம் இருந்தது, ஆனால்!, பணத்தால் வாங்க முடியாத மகிழ்ச்சி மட்டும் அவளிடம் இல்லை. வாழ்க்கையில் எல்லோரும் மகிழ்ச்சியைத் தேடுகிறோம், ஆனால்!, அது எங்கே?, எப்படி?, எதில் கிடைக்கும் என்று நினைப்பது இல்லை'..

மரங்கள் கனிகளைத் தருவது போல, தங்களிடம் உள்ளதை இல்லாதவர்களுக்கு கொடுத்து மகிழ வேண்டும். 'நம் மகிழ்ச்சி அடுத்தவர்களுக்கு உதவுவதில்தான் இருக்கிறது...

*அடுத்தவர்களுக்கு மகிழ்ச்சி கொடுங்கள்*,
உங்கள் மகிழ்ச்சி உங்களை தேடி வரும்'. "
*பிறரை மகிழ வைத்து நாம் மகிழ வேண்டும். அப்பொழுது தான்
உலகம் உங்களை கண்டு மகிழும்*"
மகிழ்ச்சி இறைவா நன்றி.
மகிழ்ச்சி வாழ்க நலமுடன்! வளமுடன்!

**- Dr.G.Bhavani Singh, Hosur**




# நமது சமூக சாதனை பெண்மணிகள்

## திருமதி என். நிரஞ்சனி தேவி

2

**வயது (74) எழுபத்து நான்கு கடந்தும் இன்றும் சுறுசுறுப்புடன் இயங்கி கொண்டிருக்கும் நம் சமூகத்தின் ஒரு பெண்மணி பற்றிய குறிப்பு:**

1947 ஆம் ஆண்டு தஞ்சை மண்ணில் நாராயண சிங் - ராணி பாய் தம்பதியர்களுக்கு மூன்று அண்ணன்கள், நான்கு அக்காகள், ஒரு தங்கையுடன் எட்டாவது குழந்தையாக பிறந்த பெண்மணிதான் திருமதி என். நிரஞ்சனிதேவி அவர்கள்.

1966 ஆம் ஆண்டு எஸ்எஸ்எல்சி தேர்வு எழுதிய இவருக்கு ரிசல்ட் வருவதற்கு முன்பாகவே ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷனில் வேலை கிடைத்தது என்றால் எவ்வளவு பெரிய அதிர்ஷ்டசாலியாக இருப்பார் என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

1967 ஆம் ஆண்டு புதுக்கோட்டை மாவட்டம் அரிமலம் என்னும் ஊரில் தமிழக அரசு பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்த திரு. பாலாஜி சிங் என்பவரை திருமணம் செய்து கொண்ட இவர் 1969 ஆம் ஆண்டு தன்னுடைய கணவருக்கு பணி மாறுதல் பெற்று சென்னை வந்து சேர்ந்தார்.. அதன்பிறகு சென்னை அம்பத்தூரில் மாந்தோப்பில் தவணை முறையில் ஒரு காலி மனையை வாங்கி அதில் தற்காலிக ஓலைக்குடிசை கட்டி வாழ்ந்து வந்திருக்கிறார். அன்றிலிருந்து இன்றுவரை அதே பகுதியில் பல கட்டிடங்களை கட்டி செழிப்போடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

இவருக்கு மூன்று பெண் குழந்தைகள், ஒரு ஆண் குழந்தை பிறந்தது. தனது நான்கு குழந்தைகளையும் பட்டப் படிப்பு வரை படிக்க வைத்து திருமணங்களையும் நடத்தி முடித்து உள்ளார். இவருக்கு ஐந்து பேத்திகள், இரண்டு பேரன்கள் உள்ளனர். இவர்களில் இரண்டு பேத்திகள் திருமணம் செய்து நல்வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பேத்திகளுக்கும் குழந்தைகள் பிறந்ததை பார்த்த புண்ணியம் இவருக்கு கிடைத்துள்ளது என்றால் பெருமைக்குரிய விஷயம் தான். இவரது பேரக்குழந்தைகள் B.E. வரை படித்து பணிபுரிந்து கொண்டும் இருக்கிறார்கள். ஒரு பேத்தி அன்னனூர் Saint Peter's Engineering College ல் படித்து University Gold Medal பெற்றவர். மற்றொரு பேத்தி IAS தேர்வும் எழுதிக்கொண்டிருக்கிறார். இந்த பேத்திக்கும் திருமணம் செய்து வைக்க நல்லவரனையும் பார்த்துக் கொண்டும் உள்ளார். இவரது கணவர் தலைமை ஆசிரியராக பணி செய்து ஓய்வு பெற்றவர். இவருடைய மருமகள் Southern Railway (Central Government) ல் பணிபுரிந்து கொண்டு இருக்கிறார் இதிலிருந்து இவரது குடும்பம் கல்வியிலும் பணியிலும் எந்த அளவிற்கு சிறந்தோங்கி இருக்கிறது என்பதும் பெருமைக்குரிய சான்றாகும்.

இவர் பணி செய்து வந்த ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் 1974ஆம் ஆண்டில் மூடப்பட்டுவிட்டது. குறுகிய ஆண்டுகளே ஓய்வு பெற்றிருந்த நேரத்தில் புரட்சித்தலைவர் எம்ஜிஆர் தொடங்கிய சத்துணவு திட்டத்தில் அரைநாள் பகுதி நேர ஆசிரியராக ரூபாய் 150 சம்பளத்தில் பணியில் அமர்ந்தார். அரை நாட்கள் சத்துணவு திட்டத்தில் பணிபுரிந்து மீதியுள்ள அரை நாட்களில் துணிகள் வியாபாரம் செய்தும் வருமானத்தை ஈட்டி வந்திருக்கிறார்.



# நமது சமூக சாதனை பெண்மணிகள்

## திருமதி என். நிரஞ்சனி தேவி

2

இவரது தலைமையில் அமைந்த மகளிர் அணி சுய உதவி குழுவில் இணைந்து பலருக்கு தாலிக்கு ஒரு பவுன் தங்கம் மேலும் ரூபாய் 50 ஆயிரத்தை பெறுவதற்கு உறுதுணையாக சேவை புரிந்த பெண்மணியும் ஆவார். சென்னை அம்பத்தூர் ராமாபுரம் பகுதியில் கவுன்சிலர் பதவிக்கு சுயேச்சையாக போட்டியிட்டவர் என்றால் இவரது தன்னம்பிக்கையை துணிச்சலை நேர்மையை பார்த்து அப் பகுதி மக்களையே வியப்படைய செய்த பெண்மணியும் ஆவார்.

இவர் கவின் ரியல் எஸ்டேட்டில் சேர்ந்து பலருக்கு வீட்டு மனைகளை வாங்கித் தருவதில் அக்கறை காட்டிய பெண்மணி என்பதும் குறிப்பிடத்தக்கது. இவரால் பலர் வீட்டு மனைகள் வாங்கி பலனடைந்து வருகின்றனர் . இன்றும் இப் பணியை செய்து கொண்டு தான் உள்ளார். ஆகவே வீட்டுமனைகள் வாங்க ஆர்வம் உள்ளவர்கள் 7448960371 என்ற எண்ணுக்கு தொடர்பு கொள்ளலாம்.

74 வயதை கடந்தும் கோடாக் மகேந்திரா இன்சூரன்ஸ் கம்பெனியில் தன்னுடைய காலை பதித்திருக்கிறார் என்றால் ஆச்சர்யம்தானே. இதில் பலரை பாலிசி ஹோல்டர்களாக்கி சீனியர் அட்வைசர் என்ற பதவியையும் பெற்றுவிட்டார். அதுமட்டுமல்லாமல் கோடாக் மகேந்திரா இன்சூரன்ஸில் குறுகிய காலத்தில் பல பதக்கங்களை பெற்றுள்ளார். மாதாந்திர ஊதியம் பெறும் நபராகவும் உள்ளார். இப்பொழுது IAP என்னும் பதிவையும் பெற உள்ளார்.

சத்துணவு கூடத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற ஊழியர்கள் சங்கத்தில் சென்னை மாவட்டத்திற்கு மகளிர் அணி தலைவி எனும் பதவியை பெற்று அதில் தன்னுடைய பெரும்பான்மையான பங்களிப்பை கொடுத்துக்கொண்டிருக்கிறார் என்பதும் பெருமைக்குரிய விஷயம்தான்.




தமிழ்நாடு ராஜ்புத் பொந்தில் சங்கத்தில் வடசென்னை மாவட்ட மகளிர் அணி தலைவியாக இருக்கும் இவர் இப்பொழுது மாநில அளவில் மகளிர் அணி துணை செயலாளராக உயர்ந்திருக்கிறார் என்றால் அவர் நமது சமுதாயத்து மக்களிடத்தில் எந்த அளவிற்கு மதிப்பை பெற்று இருப்பார் என்பதை உணரமுடிகிறது. தமிழ்நாடு ராஜ்புத் பொந்தில் சங்கத்தின் மாநில தலைவர் மரியாதைக்குரிய டாக்டர் திரு.ஜி.பவானி சிங் அவர்களிடத்திலும் மாநில மகளிரணி தலைவி திருமதி .ஷோபா ராணி பாலாஜி சிங் அவர்களிடத்திலும் நன்மதிப்பை பெற்று தொண்டு புரிந்து கொண்டிருக்கிறார். இப்படியாக இவர் நமது சங்கத்தின் வளர்ச்சியில் ஆக்கப்பூர்வமான செயல்களில் எந்த அளவிற்கு ஈடுபாடு காட்டி கொண்டிருக்கிறார் என்பதையும் நம்மால் உணர முடிகிறது.





# நமது சமூக சாதனை பெண்மணிகள்

## திருமதி என். நிரஞ்சனி தேவி

2

தமிழ்நாடு ராஜ்புத் பொந்தில் சங்கத்தின் கூட்டம் எங்கு நடந்தாலும் அதில் தொடர்ந்து பங்காற்றி கொண்டிருப்பவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. தன்னுடைய கணவர் மிகவும் உடல்நிலை சரியில்லாத நிலையில் இருந்த நேரத்திலும், கோவை மாவட்டத்தில் நடந்த குடும்ப விழாவில் கலந்து கொண்டார் என்றாள் பாராட்டிற்கு உரிய செயல் ஆகும்.



ராணிப்பேட்டையில் நடந்த உலக மகளிர் தினத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு செயலாற்றியது பலரை மெய்சிலிர்க்க வைத்தது.

அதாவது நமது சமுதாயத்தில் 74 வயது கடந்தும் இன்றும் 17 வயது பெண்ணை போல் சுறுசுறுப்புடன் விறுவிறுப்புடன் ஆர்வத்துடன் ஈடுபாட்டுடன் மன மகிழ்ச்சியோடு தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டிருக்கக்கூடிய இவர் நம் சமுதாயத்திற்கு கிடைத்த மிகப்பெரிய பொக்கிஷமாகத்தான் கருத வேண்டும்.

எஸ்.எஸ்.எல்.சி வரையுமே படித்த ஒரு பெண்மணி பலதுறைகளில் கால் பதித்து வெற்றி நடை போட்டுக் கொண்டிருக்கிறார் என்றால் அவர் இன்றைய சமுதாயத்தில் இருக்கக்கூடிய இளம் தலைமுறையினருக்கு மிகவும் பொருத்தமான எடுத்துக்காட்டானவர் என்பதில் யாருக்கும் எந்தவித மாற்றுக் கருத்தும் இருக்காது.

சமீபத்தில் தன்னுடைய கணவர் இறந்து விட்ட நிலையிலும் இன்னமும் நமது சமூகத்திற்கு சேவை செய்ய துடிப்புடன் இருக்கிறார் என்றால் இவரைவிட ஒரு சிறந்த எடுத்துக்காட்டான பெண்மணியை காண்பது அரிதே.

இவரது கணவர் திரு.பாலாஜி சிங் இறப்பில் இரங்கல் செலுத்தும் விதமாக, ராஜ்புத் பொந்தில் சங்கத்தின் சார்பில் மாநில பொதுச் செயலாளர் திரு. ஜெ.பிரகாஷ் சிங், மாநில துணைச் செயலாளர் திரு. ஈ.ராஜேந்தர் சிங், மாநில துணை தலைவர் திரு.கே.விஜய குமார் சிங், மாநில மகளிர் அணி தலைவி திருமதி.ஷோபாராணி, தென் சென்னை மாவட்ட இணைச் செயலாளர் திரு பாலாஜி சிங், வட சென்னை மாவட்ட இணைச் செயலாளர் திரு. பீ.கே. பாலாஜி சிங், தென் சென்னை புறநகர் துணைத் தலைவர் திரு. ரவிசந்தர் சிங் மற்றும் ஓய்வு பெற்ற சத்துணவு ஊழியர் சங்கத்தின் நிர்வாக நிர்வாகிகளும் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தி சிறப்பித்தவகையில் இவரை பெருமைபடுத்தி உள்ளனர்.



சமீபத்தில் ஓய்வு பெற்ற சத்துணவு ஊழியர்களின் ஊதிய உயர்வை பெறுவதற்காக தமிழக முதல்வர் திரு மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து பல கோரிக்கைகளையும் கொடுத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# நமது சமூக சாதனை பெண்மணிகள்

## திருமதி என். நிரஞ்சனி தேவி

2



இவரது மற்றொரு சிறப்பு என்னவென்றால் மற்றவர்களுடைய முன்னேற்றத்தைக் கண்டு பொறாமை படாதவர். ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் பெண் உள்ளார் என்பர் இக்கருத்து இவருக்கு முழுமையாக பொருந்தும். தன் இல்லத்திற்கும், தன்னுடன் பிறந்தவர்கள் இல்லத்திற்கும் நம் சமுதாய மக்களுக்கும் ஆற்றி வருகின்ற பணி மெச்ச தக்கதே.



Niranjani Devi with Ambattur D.M.K. MLA

என். நிரஞ்சனி தேவி எனும் இவர் மேலும் பற்பல சாதனைகளை புரிந்திட, நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் பெற்று நீடோடி வாழ்ந்திட வேண்டுமென வாழ்த்துவோமாக.

நன்றி நன்றி நன்றி.

பீ.கே.பாலாஜி சிங் எம்.ஏ. பி.எட்
வடசென்னை மாவட்ட இணைச் செயலாளர்

**CONGRATULATIONS & BEST WISHES TO SMT. N.NIRANCHANI DEVI.**

**TNRBA & NEWS LETTER TEAM**

## CONGRATULATIONS



திருமதி. B.பத்மினி பாய்
திருச்சி மாவட்டம்



திருமதி. P.ஜனனி பாய்
நாமக்கல் மாவட்டம்

தமிழ் நாடு ராஜ்புத் பொந்தில் சங்கம், TNRBA பெண்கள் பிரிவின் புதிய மாநில செயற்குழு உறுப்பினர்களின் எதிர்கால முயற்சிகளும், பணிகளும் சிறக்க வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.



# ஆத்மா பற்றிய ஸ்ரீ ரமணர் அவர்கள் !!!

**Shared by Shri.K.Vijaya Kumar Singh**



ஆத்மா பற்றிய ஸ்ரீ ரமணர் அவர்கள் !!!!!!

இந்த உலகத்தில் எல்லோரையும் ஆட்டிப்படைப்பது அகந்தை எனும் அஹம்பாவம் !!!!!

நான் எனது என்ற நினைப்பு......

அடையார் தியாஸாஃபிகல் சொசைட்டி தலைவர்
ஜீனராஜ தாஸாவின்
மனைவி......

ஒரு நாள் இது எதனால் இப்படி ஆட்டிப்படைக்கிறது என்ற காரணத்தை அறிய முற்பட்டார்.....

இதனால் தான் உலகத்தில் நாடுகளிடையே குடும்பங்களிடையில்
தனி நபர்களிடையே பிளவு வேற்றுமையும் வளர்கிறது ... ஏற்படுகிறது...

எதனால் இது உண்டாகிறது.. என்று அறிந்து கொள்ள பகவான் ரமண மகரிஷியிடம் சென்றார்.....

அவர்களுக்குள் நடந்த சம்பாஷணை இது -------

ஸ்வாமி அஹம்பாவத்திற்கும் ஆத்மாவுக்கும் என்ன வித்யாசம்....

எதெல்லாம் வந்து போகிறதோ.. எது உண்டாகி வளர்ந்து அஸ்தமனமாகிறதோ

எது பிறந்து மறைகிறதோ
அது தான் அகம்பாவம்....

எது மாறாத ஸ்திதியில் உள்ளதோ இது போன்ற குணங்கள் அற்றதோ அதுவே ஆத்மா.....

ஸ்வாமி கடவுள் எரியும் தீ நாமெல்லாம் தீப்பொறிகள் என்று சொல்லலாமா....

தீப்பொறிகள் தீயிலிருந்து வெளிப்பட்டு வெளியே விழுந்து மறைவன.....

நாம் கடவுளை விட்டு எப்போதும் விலகாதவர்கள்....

நம்மைத் தவிர கடவுள் என்ற சக்தி உள்ளதா...

இந்த பிரபஞ்சத்தை படைத்தவர் ஒருவர் இருக்க வேண்டுமே...

நாம் என்று சொல்லும்போது உனது தேகத்தை சொல்கிறாயா....

அப்படியென்றால் அதை ஸ்ரிஷ்டித்தவன் உண்டு...

நாம் என்று நீ சொல்வது ஆத்மாவானால் அதை படைத்தவன் என்று ஒருவன் வேறு யாருமில்லை....

இந்த பிரபஞ்சத்தை ஒரு வஸ்துவாக எண்ணி பார்த்தாயானால் உன்னைத் தவிர அதில் மற்ற எவ்வவோ வவஸ்துக்களைக் காண முடியும்....

படைத்தவன் ஒருவன் இருக்கிறான் என்று தோன்றும்....

தேகம் கடவுள் இந்த உலகம்எல்லாமே தோன்றி ஆத்மாவில் மறைவதாக காண்பாய்....
கடவுளை ஆத்மாவிலிருந்து வேறுபட்டவனாக கண்டால் அவன் தனித்துவமாக வெளியில்

Contd...

## ஆத்மா பற்றிய ஸ்ரீ ரமணர் அவர்கள் !!!........

எங்கும் இயங்குபவனாக
இல்லாமல் காணாமல்
எங்கும் இல்லாதவனாக உணர்வாய் !!!!!!!

ஸ்வாமி அப்படியென்றால் ஒருவன்
இந்த அகம்பாவ ஆத்மாவின்
செயல்பாடுகளிலிருந்து
அதை உயர்த்தி உண்மையான
ஆத்மாவில் நிலை நாட்ட வேண்டும்
அல்லவா....

அகம்பாவ ஆத்மா என்று ஒன்று
இல்லையே அம்மா...

இல்லாத ஒன்று ஏன் ஸ்வாமி
அவ்வளவு தொந்தரவு கொடுக்கிறது..
மக்களிடமும்...

நாடுகளிடையேயும்
நீ உயர்ந்தவனா நானா
என்றெல்லாம் எண்ண வைத்து
அழிவை உண்டாக்குகிறதே !!!!!!

யாருக்கு அம்மா நீ சொல்லும் துன்பம்
எல்லாம் வெறும் கற்பனை தான்....

இன்பம் துன்பம் எல்லாமே
அகம்பாவத்தால் விளையும் இல்லாத
சுய கற்பனையே....

அகந்தை எதனால் ஏன் எப்படி என்று
மனதிற்குள் ஆராய்ந்தால் அகந்தை
எனும் அகம்பாவம் காணாமல்
போகும்...

இன்பம் துன்பம் எனும் மாயை
விலகும்....

எல்லாவற்றுற்கும் ஆதாரமான ஆத்மா
புரியும்....

சத்தியத்தை அறிந்து கொண்டால்
அங்கே
அகந்தையோ அஞ்ஞானமோ தலை
காட்டாது.....

ஸ்வாமி எப்படி இந்த அகந்தை
உருவாகிறது
எனெளறு கேட்கிறார்
ஜின ராஜதாஸாவின் மனைவி.....

அகந்தை என்பதே இல்லாத ஒரு
விஷயம்
இது இருந்தால் இரு மனிதர்களாக நாம்
செயல்படுவோம்....

அகந்தை கொண்டவன் ஒருவன்
ஆத்மன் ஒருவன் என்று...

நாம் ஒரே ஒரு கண்ணுக்கு புலப்படாத
முழுசாக இருக்கிறோம்

உன்க்குள்ளே ஆத்ம விசாரம் பண்ணிக்
கொண்டே இருந்தால்
நாம் இருப்பதாக நினைக்கும் ....

அகந்தையோ அஞ்ஞானமோ
உண்மையில் இல்லை
என்று புலப்படும்.....

மனதை ஏன் நாம் ஒருமைப்படுத்த
வேண்டும்....

இதோ பார் அம்மா
மனதை கஷ்டப்பட்டு ஒருமைப்படுத்தி
கடினமாக மனதை செலுத்துவதோ
தியானமோ ஆன்மீக செல்பாடுகளோ
ஆத்மாவை அறிந்து கொள்ள செய்ய
வேண்டும் என்கிற கட்டாயமோ
அவசியமோ இல்லை !!!!!

Contd...

## ஆத்மா பற்றிய ஸ்ரீ ரமணர் அவர்கள் !!!......

ஏனென்றால் இப்படி கஷ்டப்பட்டு எதை தேடுகிறோமோ அந்த ஆத்மா எப்போதும் நிலையாக நம்முள் இருக்கிறது....

அறியாமை அஞ்ஞானம்
அதை மறைக்கிறது...

நாம் இந்த தேகத்தோடு இருக்கிறோம் என்று அறிய கண்ணாடி அவசியமில்லை....

நாம் இருக்கிறோம் என்பதேபுரிதல் ஏதோ ஒன்று இயங்குகிறது என்று அறிவதே அறியாமையை போக்குகிறது.....

பின் எதற்காக மனிதன் துன்பத்தை அனுபவிக்கிறான்...

அவன் தன்னை யார் என்று புரிந்து கொள்ளாததால்..
தன்னை அறியாமையால் அகந்தைக்குட்படுத்தி கொள்வதால் துன்பங்கள் அவனைத் தேடி வருகிறது....

உண்மையிவ் அதுவல்ல அவன்...
நான் கோபாலசாமி குப்பனின் மகன் என்று சொல்லும் வரை அவனை துன்பங்கள் விடாது.....

உண்மையில் அவன் ஆத்மா நாம ரூப பேதங்கள் குணங்களுக்கு அப்பாற்பட்டவன் என்று புரிந்து கொள்ள தவறியவன்....

கனவு காணாமல் அவன் அசந்து தூங்கும் போது இந்த குணங்கள் எங்கே போயிற்று...

அவன் உருவம் பெயர் காணும் காட்சிகள் எங்கே போயிற்று...

உடம்பு தெரிந்ததா அப்போது..
அவன் இருக்கிறான்...
ஆனால் அது அவன் நினைக்கும் அவன் இல்லை என்று அறிகிறானா...

உடலற்ற ஏதோ ஒன்று என்று அறிகிறானா....

நீ அதுவாக இருக்கிறாய்....

**** தத் த்வம் அஸி என்று அறிந்தவன் ஞானி கூறுகிறான்...

இது தான் முழு உண்மை அசையாமல் ஆத்மாவை எண்ணிக் கொண்டு இரு....

நானே அந்த கடவுள் எனும் ஆத்மா என்ற நினைவில் திளைப்பது தான் தியானம்...

அதுவாகவே ஆகிவிடுவது அப்போது புரியும்....

அசையாமல் என்றால் என்ன....
எண்ண ஓட்டங்கள் இல்லாமல் அது ஒன்றே உருவங்கள் வண்ணங்கள் குணங்கள் காலம் நேரம் இடம் எல்லாவற்றையும் உருவாகி காட்டும் வித்தையை செய்கிறது ...!!!!!!

நன்றி..

**J K SIVAN**, நங்கநல்லூர், சென்னை
கட்டுரை ஆசிரியர்....

## சங்க கலந்தாய்வு கூட்டம்



கோவை, ஈரோடு, திருப்பூர் மாவட்டங்களின் கலந்தாய்வுக்கூட்டம் கோவை துணைச் செயலர் திரு.சத்தீஷ் சிங்கின் அலுவலகத்தில் இனிதே நிறைவு பெற்றது!

புத்தாண்டின் சங்க மாநாட்டின் வரவு, செலவு கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு புரிந்துணர்வுடன் முடிக்கப்பட்டது! அடுத்த கலந்தாய்வுக்கூட்டம் விரைவில் "நன்றி அறிவிப்புக்கூட்டமாக நடத்த தீர்மானிக்கப்பட்டது!

கலந்து கொண்ட நிர்வாகிகளுக்கு நன்றியுடன்



## பிறந்த நாள் வாழ்த்துக்கள்



01.04.2021 அன்று பிறந்த நாள் கொண்டாடும் TNRBA News Letter (மின் இதழ்) நிர்வாக குழு உறுப்பினர், வட சென்னை மாவட்ட கிளை சங்க இணை செயலாளர் திரு. B.K.பாலாஜி சிங் அவர்களுக்கு TNRBA News Letter நிர்வாக குழுவின் சார்பாக இனிய பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

மின் இதழ் ஆக்கத்தில் உங்கள் பங்கு போற்றுதலுக்குரியது. அது இன்று போல் என்றும் தொடர வேண்டும் என்று விரும்பி வாழ்த்துகிறோம்..

நன்றியுடன்...

TNRBA - மின் இதழ் நிர்வாக குழு.



# கவிதை – சீரிய வளர்ப்பு

## சீரிய வளர்ப்பு

மானிடர், விலங்கினங்களின் குருதியின்
நிறமோ சிவப்பு

சிவந்த நிறத்தில் காட்சியளிப்பதுவோ
நெருப்பு

மண்ணில் தோன்றிட்ட நமக்கு பற்பல
சாதனைகள் செய்திட கிடைத்ததோ
நல்லதொரு வாய்ப்பு

கையில் செங்கோல் கிடைத்துவிட்டால்
அடைந்திடாதே இறுமாப்பு

நற்திட்டங்கள் தீட்ட மனதில்
வேரூன்றுவதோ நல்லதொரு அமைப்பு

வாழ்வில் பற்பல சோதனைகளை கண்டு
அடையாதே சலிப்பு

ஒருவன் வாழ்வில் முன்னேற்றத்திற்கு வழி
வகுப்பதோ அவனது உழைப்பு

குறுகிய காலத்தில் முன்னேற்றம் காண
செய்து விடாதே தப்பு மேல் தப்பு

தவறு செய்தவன் திருந்தும் போது கேட்க
நினைப்பதோ மன்னிப்பு

மனிதர்களை ஏமாற்ற வைப்பதோ
ஆடம்பரமான பளபளப்பு

பெண்கள் பொது இடத்தில் கூடினால்
ஏற்படுவதோ சலசலப்பு

வீண்வம்பு இழுப்புவனிடம் இன்றைய
மாதர்கள் காட்டுவதோ செருப்பு

கொரோனா வைரஸிடம் தப்பிக்க முக
கவசம் அணிவதோ தற்காப்பு

அரசியல்வாதிகள் ஒன்று கூடினால்
ஏற்படுவதோ கைகலப்பு

இன்றைய சூழலில் இதற்கெல்லாம்
சொல்லமுடியுமா மறுப்பு

பச்சிளம் குழந்தைகளின் முகத்தில் நாம்
காண விரும்புவதோ மத்தாப்பு சிரிப்பு

காதலில் தோல்வி கண்டவனை வாழ
வைப்பதோ அவளின் நினைப்பு

பகைவரிடம் காட்டாதே வெறுப்பு ,
காட்டினாள் ஏற்படுவதோ பொல்லாப்பு

பிள்ளைகளின் வளர்ச்சியில் தாய்
காட்டியதோ அன்பெனும் கவனிப்பு

கல்வி கற்றவனுக்கு செல்லுமிடமெல்லாம்
கிடைக்கும் சிறப்பு அழைப்பு

அறிவாளியின் முன்னேற்றத்திற்கு காரணம்
அவனது தாயின் சீரிய வளர்ப்பு

பீ.கே. பாலாஜி சிங் எம்.ஏ. பி.எட்
கொளத்தூர், வடசென்னை மாவட்டம்.



# நமது சமூக சாதனை பெண்மணிகள்

## திருமதி. அபிராமி பாய் அசோக்குமார் சிங்

3

ஜெய் மாதா பவானி !
ஜெய் ராஜ்புத்தானா !!

நமது சமுதாயத்தின் தலைசிறந்த தலைவரும் தன் இன மக்களின் வளர்ச்சியை தனது மகிழ்ச்சி என்ற குறிக்கோளை கொண்ட மாநில தலைவர் டாக்டர் ஜி பவானி சிங் அவர்களுக்கு என் முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநிலத் தலைவர் ஆசியுடன் எனது வாழ்க்கைப் பயணத்தை உங்களிடம் பகிர்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.
என் பெயர் அபிராமி பாய் அசோக்குமார் சிங். நான் பெங்களூரில் பிறந்து தமிழ்நாட்டில் வளர்ந்தவள். எனது தந்தை திரு ஜெகநாதன் ஆர்மி ஆபிசராக இருந்தவர். எனது தாய் டிக்கா பாய். என்னுடன் பிறந்தவர்கள் இரண்டு அண்ணன், ஒரு அக்கா.

### பள்ளிப் பருவம் :

எனது பள்ளிப் பருவம் மிகவும் சுவாரஸ்யமானது. கிருஷ்ணகிரியில் உள்ள செயின்ட் ஆன்ஸ் ஸ்கூலில் தான் நான் படித்தேன். நான் 5 வது வரை என் அப்பா, அம்மாவுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்தேன். எங்கள் குடும்ப சூழ்நிலை காரணமாக என் அம்மா துபாய்க்கு வேலைக்கு சென்று விட்டார். என்னை ஆறாவது படிக்கும் போது ஹாஸ்டலில் விட்டு விட்டனர். அந்த சமயத்தில் இருந்து தான் என் வாழ்க்கை போராட்டம் ஆரம்பித்தது. ஒரு பெண்ணுக்கு எந்த சமயத்தில் தன்னுடன் தன் அம்மா இருக்க வேண்டுமோ அந்த சமயத்தில் என் அம்மா என்னுடன் இல்லை .அந்த நிமிடத்திலிருந்துதான் என் வாழ்க்கையுடன் எதிர்நீச்சல் போட ஆரம்பித்தேன். நான் மிகவும் சுமாராக தான் படிப்பேன் ஆனால் மிகவும் தைரியத்தை வளர்த்துக் கொண்டேன்



என் தந்தை

தனியாக வாழ கற்றுக் கொண்டேன். என்னிடம் இல்லாத திறமை எல்லாம் கற்றுக் கொள்ள ஆசைப்பட்டேன். பாட்டு, நடனம் அனைத்தும் கற்றுக்கொண்டேன். விளையாட்டில் நான் ஸ்டேட்ஸ் பிளேயர் .அத்லட்டில் டிஸ்ட்ரிக் பிளேயர். இதற்கு எல்லாம் உறுதுணையாக இருந்தது என் அண்ணன் மட்டும்தான் அவருக்கு இந்த சமயத்தில் நான் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன் அவர் தான் அந்த சமயத்தில் என் அம்மாவாக எனக்கு தெரிந்தார்.



என் குடும்பம்



# நமது சமூக சாதனை பெண்மணிகள்
## திருமதி. அபிராமி பாய் அசோக்குமார் சிங்

3

### கல்லூரி வாழ்க்கை :

குமாரபாளையத்தில் உள்ள ஜே கே கே காலேஜில் பிஎஸ்சி ஜூவாலஜி படித்தேன். அந்த சமயத்தில்தான் நான் பேச்சாளர் ஆக வேண்டுமென்ற ஆசையில் பேச்சுப் போட்டியில் கலந்து கொள்வேன். என்னிடம் எனது அப்பா அப்பொழுது அவ்வளவு பணம் தர மாட்டார் அதனால் கேன்டீனில் செலவு செய்யும் சமயத்தை விட்டு லைப்ரரியில் சமயத்தை செலவு செய்தேன் அதன் விளைவாக கண்ணதாசன், மகாகவி சுப்பிரமணிய பாரதியின் புத்தகத்தை படித்தேன். அந்த புத்தகத்தை எல்லாம் படிக்கும் போது எனக்குள் ஒரு தேடலை அப்போதே தொடங்கிவிட்டேன். அந்த ஆர்வம் தான் இப்பொழுது நமது சமுதாயத்திற்கு பணியாற்றிட வேண்டும் என்ற எண்ணம் ஊன்றுகோலாக இருக்கிறது. மற்றும் கல்லூரியிலும் நான் யுனிவர்சிட்டி பிளேயர் ஆக இருந்தேன்.

### இடைக்கால வாழ்க்கை:

என் கல்லூரி படிப்பு முடிந்தவுடன் அப்போது தான் என் அம்மா துபாயில் இருந்து வந்தார். என் மகிழ்ச்சி மீண்டும் என்னிடம் வந்து விட்டது ஆனால் நான் தொலைத்த அந்த பள்ளிப் பருவம் இனி எப்போதுமே வராது. வருவதை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் அப்பொழுதே எனக்கு வந்து விட்டது பிறகு ஒரு கம்பெனியில் சூப்பர்வைசராக வேலை பார்த்தேன். அப்போது தான் இந்த உலகத்தின் படிப்பை படிக்க ஆரம்பித்தேன் விதவிதமான மனிதர்கள், எண்ணங்கள், செயல்கள் இதை எல்லாவற்றையும் எதிர் கொண்டு என்னை நானே செதுக்கி கொண்டேன். அந்த கம்பெனியை விட்டு நான் வெளியே வரும்போது நான் ஒரு ஃபேக்டரி இன்சார்ஜாக இருந்தேன். என்னுடைய உழைப்பின் வருடம் 14, அதன் பிறகு ஒரு கிரானைட் கம்பெனியில் சேர்ந்தேன். எனது பேச்சு திறமையை பார்த்து எனது எம்.டி மேடம் என்னை எம்.பி.ஏ படிக்க வைத்தார் மார்க்கெட்டிங் டிபார்ட்மெண்டில் ஐந்து வருடம் வேலை பார்த்தேன், என் பொன்னான காலம் அது என்று சொல்லலாம்.

### .மண வாழ்க்கை :

எனது வாழ்க்கையின் வசந்த காலம் தான் எனது மண வாழ்க்கை. இப்பொழுது என் அம்மா அப்பா அண்ணன்கள் யாரும் என்னுடன் இல்லை ஆனால் அந்தக் குறையை என் கணவர் என்றுமே எனக்கு வைத்ததில்லை. என் பெற்றோர் போல அவர் என்னை கவனித்துக் கொள்ளும் விதம் அந்த கடவுள் தந்த வரம் என்று நினைப்பேன். இது ஏனென்றால் நான் சிறு வயதில் பட்ட கஷ்டம் இப்பொழுது கடவுள் எனக்கு நிறைவான வாழ்க்கையை கொடுத்து இருக்கிறார் என்று எண்ணுகிறேன். அவருக்கு இத்தருணத்தில் என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





# நமது சமூக சாதனை பெண்மணிகள்

## திருமதி. அபிராமி பாய் அசோக்குமார் சிங்

3

### சமுதாயப் பணி :

**சமுதாயப் பணி** :எனக்கு என்ற ஒரு குடும்பம். அந்த குடும்பத்தில் இன்னொரு பெரிய குடும்பம் ஆம் நான் கண்ட மாணிக்கம் தான் இந்த டி என் ர பி ஏ குழுமம். என்னை இந்த சமுதாயத்திற்காக பணியாற்றிட எனக்கு வாய்ப்பு தந்த அனைவரும் என் வழிகாட்டிகள். அவர்கள் கொடுத்த வாய்ப்பால் தான் இந்த சமுதாயத்திற்கு என்னால் முடிந்த அளவு உதவி செய்ய முடிந்தது. மற்றும் நமது குழுவில் யாருக்கு பிறந்தநாள் வந்தாலும் அவர்களைக் கூட்டிக்கொண்டு போய் அனாதை ஆசிரமத்திற்கு உணவு வழங்குவது என் தலையாய கடமையாக வைத்துள்ளேன்.



### நான் கண்ட கனவு:

நான் கண்ட அந்த கனவு தான் இந்த ஆண்டு நிறைவேறியது ஆம் மகளிருக்கென ஒரு குழு அமைத்து அவர்களிடம் மாத சந்தா வசூல் செய்தேன். அந்த வசூல் செய்த பணத்தை பேங்க் அக்கவுண்டில் போட்டு சேமித்து வைத்து உள்ளோம் இதோ இந்த ஆறு மாத கால சேமிப்பு 15,000 உள்ளது. இது தான் என்னுடைய சாதனை என்று நான் நினைக்கிறேன்



எனது ஆசை நமக்கு என்று ஒரு தனி பொருளாதார அமைப்பு உருவாக்குவது தான். நான் கடந்து வந்த பாதையில் நிறைய முட்கள் இருந்தது, நிறைய பூக்கள் இருந்தது, நிறைய நெருப்பு இருந்தது. இதையெல்லாம் என் வாழ்க்கையில் கடந்து வந்து இருக்கிறேன். இன்னும் சாதிக்க காத்துக் கொண்டிருக்கிறேன், நீங்கள் வாய்ப்பு கொடுத்தால்.

வாழ்க்கைப் பயணத்தை பகிர வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி.

அபிராமி பாய் அசோக்குமார் சிங், M.B.A
கிருஷ்ணகிரி.

**CONGRATULATIONS & BEST WISHES TO SMT. ABIRAMI ASHOK KUMAR SINGH.**

**TNRBA & NEWS LETTER TEAM**

# TNRBA WISHES ITS EC MEMBER'S FAMILY MARRIAGE FUNCTION




**Marriage Date: 14.05.2021**

**Place: Pudukkottai**

**Sow. R.Rama Devi M.Sc;**

**(D/o.Shri.V.Ravi Chandhar Singh,**

**State EC Member & Pudukkottai Dist President–**

**Smt.Vijayalakshmi Bai)**


**With**

**Chi. R.Hari Baskar Singh MBA;**

**(S/o.Shri.K.Rajender Singh, Pudukkottai Dist Secretary–**

**Smt. Jamunarani Bai)**

# TNRBA WISHES ITS EC MEMBER'S FAMILY MARRIAGE FUNCTION




**Marriage Date: 21.06.2021**

**Place: Hosur**

**Sow. Dr. S. Mohanapriya M.B.B.S**

**(D/o.Shri. Sridhar Singh, State Joint Secretary –**

**Late Smt.Saraswathi Bai)**

**With**

**Chi. M.Deenathayal Singh**

**(S/o.Shri. K.Mohan Singh—Smt.Thulari Bai**



# OUR COMMUNITY'S ACHIEVEMNET LADIES

(நம் சமூக சாதனை பெண்மணிகள்)

4

## SMT. VIDYA MAGESH KUMAR

I am Vidya Magesh Kumar, residing in Nungambakkam, Chennai, Tamil Nadu.



I am a Homemaker and hobby crafter turned full time Artist. Even as a teenager, I was always interested in creative hobbies, be it sewing, knitting or decorative icing on the cake. With more time in hand ten years after marriage, I started exploring various creative avenues. From dyeing fabrics to creating mural I attended various workshops before settling for thread painting with the sewing machine. I soon realised that a good foundation in drawing and painting would immensely help in my craft. The search led me to great art teachers under whom I was able to hone my artistic skills, making me a professional artist.



I was first trained under Mrs Gowri, a traditional Tanjore Painting artist, who taught me the art in great depth. During this period I also got the opportunity to learn various other Indian Art forms like Pattachitra, Thangka and Kerala murals from authentic artists. The next master I trained under was Sri. A. V. Ilango, a renowned artist and a great teacher who laid a strong foundation in every aspect of fine arts from live sketching to various mediums like watercolours, acrylics and oils.

My quest for learning and experimenting also introduced me to glass engraving. I was able to create exquisite engraved glasses and displayed them at an exhibition in Valluvar Kottam. That proved to be a turning point in my life..... I was offered many commission assignments and teaching jobs... I was now a Professional artist.



